Registered as a Newspaper in Ceylon

விலைசதம் 10

# ஈழநாடு
EELA NADU

| ஈழநாடு சந்தா விபரம் | | |
|---|---|---|
| இந்தியா — இலங்கை | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 6 யாழ்ப்பாணம் குரோதி ஆனி 9 ம் நாள் லபர் 11 (22-6-64) திங்கட்கிழமை இதழ் 134

# தமிழரசு எம். பி. க்கள் பதவி துறக்க முடிவு

## சிம்மாசனப் பிரசங்கத்தின் பின் ராஜினாமாச் செய்வார்கள்

### கட்சியின் புதிய தலைவராக திரு. செல்வநாயகம் ஏகமனதாகத் தெரிவு

திருக்கோணமலை, ஞாயிறு

**பாலிமெண்டின் புதிய கூட்டத் தொடர் ஆரம்பமாகி சிம்மாசனப் பிரசங்கத்தின்மீதான வாக்கெடுப்பு முடிந்ததும் தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் அனைவரும் தமது பாலிமெண்ட் ஸ்தானங்களை ராஜினாமாச் செய்துவிட்டு, தமிழ்பேசும் மக்களின் சுய நிர்ணய உரிமையைப் பெறுவதற்கான புதிய போராட்டத்துக்கு தமிழ்பேசும் மக்களிடம் அதிகாரம் பெறுவார்கள்.**

சிம்மாசனப் பிரசங்கத்தின்மீது வாக்கெடுப்பு நடைபெற்று முடிந்ததும் எம். பி. பதவியை தமிழரசுக்கட்சியினர் ராஜினாமாச் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் இன்றும் நேற்றும் திருக்கோணமலையில் நடைபெற்ற கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேறியது.

தமிழரசுக்கட்சியின் புதுவருடத் தலைவராக கட்சியின் ஸ்தாபக தலைவரும் காங்கேசன்துறை எம். பி.யுமான திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.

தமிழரசுக்கட்சியின் செயற்குழுக்கூட்டம் நேற்றும் இன்றும் திருக்கோணமலையில் கட்சியின் தலைவர் திரு. எஸ்.எம். இராசமாணிக்கம் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் அரசாங்கத்தின் சிங்களம் மட்டும் சட்ட அமுலினால் தமிழ்பேசும் மக்களை நாளுக்கு நாள் பாதிக்கும் சம்பவங்கள் பற்றியும் தமிழ் பாடசாலைகளுக்கு இரண்டாயிரம் சிங்கள ஆசிரியர்கள் அனுப்புவதென்ற அரசாங்கத்தின் தீர்மானம், தமிழ் அரசாங்க ஊழியர் கட்டாயமாக ஓய்வுபெறச் செய்யும் உத்தரவு, தோட்டப் பாடசாலைகளில் தமிழ்பேசும் குழந்தைகளுக்கு சிங்களத்தில் கல்வியூட்டும் திட்டம், தலைமையாசிரியர்கள் சிங்களத்தில் தேர்ச்சி பெறவேண்டுமென்ற அரசாங்கத்தின் நிபந்தனை ஆகியவைபற்றியும் செயற்குழு ஆராய்ந்தது.

தமிழ்பேசும் மக்களின் உரிமைகளை அரசாங்கம் படிப்படியாகப் பறித்துவருவதனாலும் அரசாங்கத்தின் சிங்களத் திணிப்பு நடவடிக்கை மூலம் உடனிருந்து வாழும் கொள்கையில் அரசாங்கத்துக்குச் சிறிதும் நம்பிக்கையில்லையென்பது தெளிவாகத் தோன்றுவதனாலும் ஜூலை மாத முற்பகுதியில் கூடும் பார்லிமெண்டின் புதிய கூட்டத்தொடரின் சிம்மாசனப் பிரசங்கத்தின் மீதான வாக்கெடுப்பு முடிவடைந்ததும் தமிழரசுக்கட்சி எம். பி.க்கள் தங்களது பார்லிமெண்ட் ஸ்தானத்தை ராஜினாமாச் செய்து, தமிழ்பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கான புதிய போராட்டத்துக்குத் தயார் செய்வதுடன் மக்களையும் தயார்படுத்துவதற்காக மக்களிடம் புதிய கட்டளை பெறுவதென்று செயற்குழு தீர்மானித்தது.

**திருமலையில் மகாநாடு**

சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கான புதிய போராட்டத் திட்டங்களை ஆகஸ்ட் மாதம் 21, 22, 23-ம் திகதிகளில் திருக்கோணமலைப் பகுதியைச் சேர்ந்த நிலாவெளிக் கிராமத்தில் நடைபெறவிருக்கும் தமிழரசுக்கட்சியின் வருடாந்த மகாநாட்டில் தீர்மானிக்கப் படவிருப்பதாகத் தெரிகிறது. மகாநாட்டை நிலாவெளியில் வைப்பதெனத் தீர்



மானிக்கப் பட்டிருப்பினும் திருக்கோணமலையில் வைப்பதற்கு ஆலோசனை செய்யப்படுவதாகவும் அறியப்படுகிறது.

**தீர்மான விபரம்**

"சுதந்திரமடைந்த மக்கள் தங்கள் தாய்மொழியில் ஆளப்படவும் அடிமை மக்கள் எஜமானரின் மொழியில் ஆளப்படுவதும் நடைமுறையிலிருக்கிறது. இலங்கை அரசாங்கம் திட்டமிட்ட முறையில் உத்தியோக மொழிக் கொள்கையை அமுல்நடத்தி அதன்மூலம் தமிழ்பேசும் மக்களை அடிமைப் படுத்தி அழித்து ஒழிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இந்த நாட்டில் தமிழ் பேசும் மக்களும் தமிழ் மொழியும் இந்நாட்டில் சரித்திர காலந்தொட்டு இருந்து வந்த அந்தஸ்தையும் நிலையையும் அரசாங்கம் முற்றாக உதாசீனம் செய்கிறது. எமது ஒரு

(6-ம்பக்கம் பார்க்க)

---

## 398 பேர் மாண்டனர்!

ராவல்பிண்டி, ஜூலை 21

மேற்கு பாகிஸ்தான் புயலினால் இதுவரைமாண்டவர்கள் தொகை 398 என அறிவிக்கப் படுகிறது. முழு விபரம் கிடைக்கும் போது உயிர்ச்சேதம் இன்னும் அதிகரிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டது.

---

## தாயகம் திரும்பினர்

ஜாகர்த்தா, ஜூன் 21

டோக்கியோ உச்சித் தலைவர்கள் மகாநாட்டில் கலந்துகொண்டுவிட்டு ஜனாதிபதி சுகர்னோவும் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மானும் இன்று தாயகம் திரும்பினர்.

---

## இந்தியாவுடன் நட்பு கொண்ட புதிய சகாப்தம்

### தமதுவிருப்பம் இதுவே என்கிறார் பூட்டோ

ராவல்பிண்டி, ஜூன் 21

இந்தியாவுடன் நட்புறவு கொண்டு புதிய சகாப்தத்தைக் காணவிரும்புவதாய் பாகிஸ்தான் அயல்நாட்டு மந்திரி திரு. பூட்டோ இங்கு கூறினார்.

லண்டனில் ஜனாதிபதி அயூப்கன் திரு. சாஸ்திரியைச் சந்தித்துப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாடுசெய்வார் என்றும் பூட்டோ கூறினார். பேச்சுவார்த்தை மூலம் இரு தேசப் பிரச்னைகளைத் தீர்க்கமுடியுமெனவும் அவர் கூறினார். காஷ்மீர் பிரச்னைக்குத் தீர்வு காணப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்திக் கூறினார்.

---

## 'கல்வி அறிக்கை ஆசிரியர்களுக்கு பாதகமானது'

யாழ்ப்பாணம், திங்கள்

"கல்வி சம்பந்தமான வெள்ளையறிக்கையின்படி இனிமேல் பாடசாலைகளில் இருபிரிவுகள் மட்டுமே இருக்கும். முதலாவது ஆரம்ப பாடசாலை, மற்றது மகாவித்தியாலயம். வெள்ளையறிக்கையின்படி இச்சங்கத்திலுள்ள ஆசிரியர்களுக்கு மகாவித்தியாலயத்தில் இடமிருக்காது. இது தராதரப்பத்திரமுடைய ஆசிரியர்களுக்கு இழைக்கும் அநீதியாகும்."

யாழ்ப்பாணம் சிங்கள மகாவித்தியாலய மண்டபத்தில் நேற்றுக்காலை நடைபெற்ற அகில இலங்கை அரசினர்பாடசாலைத் தராதரப்பத்திர ஆசிரியர் சங்கத்தின் நான்காவது வருடாந்த மகாநாட்டில் சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

திரு. வ. சின்னத்தம்பி தலைமையில் நடைபெற்ற இம்மகாநாட்டில், திரு. நவரத்தினம் தொடர்ந்துபேசும்போது கூறியதாவது:-

ஆரம்ப பாடசாலைகளில் 8-ம் வகுப்பு வரைதான் இருக்கும். மகாவித்தியாலயத்தில் 8-ம் வகுப்பிற்குமேல் இருக்கும்-வெள்ளையறிக்கை அமுலாக்கப்பட்டபின், மகாவித்தியாலயத்தில் இச்சங்கத்திலுள்ள ஆசிரியர்கள் பணியாற்ற மாட்டார்கள். பட்டதாரிகளால் போதிக்க முடியாத சில பாடங்களை, சிரேஷ்ட தராதரப்பத்திரம் உடையவர்கள் நல்ல முறையில் போதிக்கிறார்கள் என்பது கல்வி இலாகாவே அறிந்த உண்மை. வெள்ளையறிக்கை அமுல் செய்யப்பட்டால், மாணவர்கள் அனுபவம் நிறைந்த இவர்களின் சேவைகளை இழப்பார்கள்.

ஆசிரியர்களின் பிரச்னைகள் புதிய பிரச்னைகளல்ல, பல காலம் இருந்துவருகிறது. தராதரப்பத்திர ஆசிரியர்களின் பிரச்னையுடன், எல்லாப்பிரச்னைகளையும் சேர்த்து ஆலோசிக்க வேண்டும். வெள்ளையறிக்கையை பாராளுமன்றத்தில் விவாதித்து சட்டமாகு முன்பே அமுலுக்கு கொண்டு வருகிறார்கள். இதனால் பல ஆசிரியர்கள் பாதிக்கப்படுவார்கள். உங்கள் பிரச்னைகள் சம்பந்தமாக உங்கள் பிரதிநிதிகளுடன் கல்வி மந்திரியையும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும் பேட்டி கண்டு பிரச்னைகளை தீர்க்க வழி காண்பேன்.

ஆசிரியர் திரு. கந்தவனம் திரு. முருகேசு ஆகியோரும் பேசினார்கள்,

---

## ஜெனரல் திம்மையா நியூயார்க்புறப்பாடு

புதுடில்லி, ஜூன் 21

சைப்ரஸில் ஐ. நா. படைத் தளபதியாகப் பொறுப்பேற்கவிருக்கும் ஜெனரல் திம்மையா இன்று கோயமுத்தூரிலிருந்து நியுயோர்க் புறப்பட்டார். யுதாண்டின் அழைப்பின்மீது அவரை நியுயோர்க்கில் சந்தித்துவிட்டு ஜெனரல் திம்மையா நிக்கோஸியாசெல்வார்.

அமெரிக்கஜனாதிபதி ஜோன்ஸன் அடுத்தவாரம் வாஷிங்டனில் துருக்கி, கிரீஸ் பிரதம மந்திரிகளைச் சந்தித்து சைப்ரஸ் பற்றிப் பேசவிருக்கிறார்.

---

## பிரமபுத்ராவில் வெள்ளம்

ஷில்லாங், ஜூன் 21

அஸ்ஸாமில் பிரம்மபுத்திராவிலும் அதன் உப நதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டதின்காரணமாக பல கிராமங்கள் நீரில் மூழ்கியிருக்கின்றன.

### மணிவாக்கு

எத்தனைதான் ஏற்றமான பொருள்களும் பரிசுகளும் கிடைத்தாலும், மக்களின் அன்புக்கும் வாஞ்சைக்கும் மேலானது ஒன்றுமே இருக்கமுடியாது.

—ஜவஹர்லால்நேரு


# ஈழநாடு

EELA NADU

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna
Telegram: EELA NADU Jaffna
Phone 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு ஆனி மீ 9 உ (22-6-64)


## வேற்றுமை நீங்குமா?

அமெரிக்காவில் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த குடியுரிமைகள் மசோதா அமெரிக்க செனட்சபையில் நிறைவேறியுள்ளது. நீண்டகாலமாக அமெரிக்காவிலுள்ள நீக்ரோமக்களுக்கு இருந்துவந்த சமூகத் தடைகள் இந்த மசோதாவின் மூலம் நீங்குவதற்கு வழிபிறந்துவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. காலஞ்சென்ற அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன் எப். கென்னடி இந்த மசோதாவை சரியாக ஒரு வருடத்துக்கு முன்னர் கொண்டுவந்திருந்தார். 101 வருடங்களுக்கு முன் அடிமை விலங்கொடிக்க ஆபிரகாம் லிங்கன் எடுத்த நடவடிக்கைக்குப்பின் ஒரு பகுதி மக்களுக்கு உரிமைகள் வழங்குவதற்காக எடுக்கப்பட்ட இரண்டாவது முக்கியமான நடவடிக்கை இந்த மசோதாவாகும். பலத்த எதிர்ப்புகளுக்கிடையே உருவான இம் மசோதா ஜனாதிபதி கென்னடியின் உயிரைப் பலிவாங்கியபின் நிறைவேறியிருக்கிறது. விரைவில் இது சட்டமாகிவிடும். நீக்ரோ மக்கள் மட்டுமல்ல விடுதலையை விரும்புபவர்களும், மனித உரிமையை மதிப்பவர்களும் இந்த மசோதாவை நிச்சயம் வரவேற்பர்; கென்னடியும் அவர்கள் உள்ளங்களில் வாழ்வார்.

இந்த மசோதா சட்டமாகிவிடும், சட்டம் வந்தவுடன் எல்லோருக்கும் உரிமை கிடைத்துவிடும் என்று எதிர்பார்க்க முடியாது. இன வேற்றுமை பல்லாண்டுகளாக இரத்தத்துடன் ஊறிப்போன விஷயம். இதைச் சட்டத்தினால் உடனடியாக நீக்குவது சுலபமல்ல. இந்த வேற்றுமை அமெரிக்காவில் மட்டுமே உள்ளதல்ல. உலக நாடுகள் பலவற்றிலும் இந்த வேற்றுமைகள் உள்ளன ஆனாலும் இந்த வேற்றுமைகளை நிதானபுத்தியுள்ளவர்களும் மனிதத்தன்மையுள்ளவர்களும் வெறுக்கிறார்கள். சிலர் பகிரங்கமாக இதைக் கண்டித்தாலும் மறைமுகமாக அதற்கு ஆதரவு கொடுத்து வருவதும் உண்டு. தென்னாபிரிக்க அரசாங்கமும் அதன் தலைவர்களும் இன வேற்றுமையை வளர்த்துவருகின்றனர். மகாத்மாகாந்தி ஆரம்பித்த இந்த இனவேற்றுமை ஒழிப்புப் போராட்டம் இன்னும் முடிவடையவில்லை. இதை ஒழிக்கவேண்டுமென்று கூறும் உலகநாடுகளும் அதன் தலைவர்களும் அந்தரங்க சுத்தியுடன் தொடர்ந்து முயற்சிசெய்தால் அதில் வெற்றிபெறுவது கடினமல்ல. உலக அபிப்பிராயத்துக்கு தென்னாபிரிக்கா என்றாவது ஒருநாள் தலைவணங்கியேயாக வேண்டும்.

தென்னாபிரிக்காவிலும் அமெரிக்காவிலுமல்லாது பல்வேறு நாடுகளிலும் பல்வேறு இனசமூக வேற்றுமைகள் பல்வேறுவிதமான உருவங்களில் இருந்துவருகின்றன. மக்கள் பலர் பலவிதங்களிலும் புறக்கணிக்கப்படுகிறார்கள். ஒருபகுதி மக்களுக்கு உள்ள உரிமைகளும் சலுகைகளும் வசதிகளும் மற்றொரு பகுதி மக்களுக்கு அவர்கள் பேசும் மொழியால், அனுஷ்டிக்கும் சமயத்தினால், செய்யும் தொழிலால், தோலின் நிறத்தால் மறுக்கப்படுகின்றன. உரிமை வேண்டும் என்று குரல் எழுப்பவே முடியாத நிலையில் இன்றும் வாழ்கின்றனர். எல்லோருக்கும் சமஉரிமையும் சமசந்தர்ப்பமும் அளிக்கப்பட வேண்டுமென்ற அரசியல் சாஸனம் உள்ள நாடுகளிலும் சிறுபான்மையினருக்குப் பாதுகாப்பளிக்கும் ஷரத்து விதிகள் உள்ள அரசியல் திட்டத்தையுடைய நாடுகளிலும் கூட வேற்றுமை, பாகுபாடு காண்பிக்கப்பட்டு வருவதுமல்லாமல் இனஒழிப்புக்கு வழிவகுக்கக் கூடிய நடவடிக்கைகள் கூட நிர்வாக ரீதியில் எடுக்கப்பட்டு வருவதும் கண்கூடு. உலக மன்றமாகிய ஐ. நா. மனித உரிமைச் சாஸனத்தை நிறைவேற்றியும் அந்த ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கும்நாடுகள் பல, மனிதஉரிமை சாஸனத்தை மதித்து நடக்கின்றனவாவென்பது சந்தேகமே!

இலங்கை ஐ. நா. ஸ்தாபனத்தில் அங்கம் வகிக்கிறது. மனித உரிமை சாஸனத்தை நிறைவேற்ற முழு ஆதரவளித்தது. தென்னாபிரிக்காவின் இன ஒதுக்கல் கொள்கையை ஐ. நா. அரங்கில் வன்மையாகக் கண்டித்து வந்திருக்கிறது. தென்வியட்னாமில் பௌத்தர்களுக்கு உரிமை மறுக்கப்பட்டு பௌத்தர்கள் நசுக்கப்படுவதாக செய்திகள் வெளிவந்ததும் உரிமைவழங்கப்படவேண்டுமென குரல் எழுப்பியதுடன் ஐ. நா.விலும் வாதாடி வெற்றியீட்டிய நாடு. ஆனால் உள்நாட்டில் சிறுபான்மையினருக்கு உரிமை அளிக்கப்படவில்லையென்பதை பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த சிங்கள பௌத்தர்களே வெளிப்படையாகக் கூறிவருகின்றனர். சிறுபான்மையினர் பாரபட்சமாக நடத்தப்படுகின்றனர் என்பதற்கு எத்தனையோ சான்றுகள்.

இந்த நாட்டிலுள்ள சிறுபான்மையினரான தமிழ் மக்களுக்கு உரிமை மறுக்கப்படுகிறதென்றும் பாகுபாடு காட்டப்படுகிறதென்றும் தமிழ் மக்கள் கூறும் அதேசமயம் "சிறுபான்மைத் தமிழர்" பெரும்பான்மைத் தமிழரால் நசுக்கப்படுகிறார்களென்ற குரலும் ஒலிக்கிறது.

சட்டத்தினால் இவைகளை ஒழிப்பது சுலபமல்ல. மக்களிடையில் மனமாற்றம் ஏற்படவேண்டும். மனமாற்றத்துக்கு சட்டம் தூண்டுதலாக இருக்க உதவக்கூடும். அமெரிக்கா இதில் வழிகாட்ட வேண்டுமென்பதே மனிதாபிமானமுள்ள மக்களின் ஆவல்.

ஆசிரியருக்குக் கடிதம்

# ஆலோசனை காதில் விழுமா?

மொழிச்சட்டத்தினால் சிறுபான்மையினருக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதி பற்றிக் காலத்துக்குக் காலம் இந்த நாட்டு அரசியல் தலைவர்கள் சிலர் குரலெழுப்பி வந்திருந்தபோதிலும், வாக்குறுதிகளைத் தந்ததைத்தவிர, இப்பிரச்னையைச் சுமுகமாகத் தீர்ப்பதற்கென எந்தவிதமான முயற்சிகளையும் இந்த அரசாங்கம் இதுவரையில் மேற்கொள்ளவில்லை.

பழுத்த அரசியல் அறிஞரான திரு. வில்மட் பெரேரா சமீபத்திலும், மொழிப்பிரச்னை சுமுகமாகத் தீர்க்கப்படவேண்டும் எனவும் அப்போதுதான் சிறுபான்மை இனத்தினரின் பூரண ஒத்துழைப்பைப் பெற்று நாட்டை பொருளாதார முன்னேற்றமடையச் செயலாமெனவும் வலியுறுத்தியுள்ளார்.

என். எம். பெரேரா நிதி மந்திரியானதும் இந்த நாட்டின் கால்பகுதியினரான தமிழரது உள்ளத்தில் தமது பிரச்னைகள் சுமுகமாகத் தீர்க்கப்பட்டுவிடும் என்ற நம்பிக்கை துளிர் விடத் தொடங்கி இருக்கிறது.

இந்தியாவின் காலஞ்சென்ற பிரதமர் ஸ்ரீ ஜவஹர்லால்நேருவின் கொள்கைகளைப் பின்பற்றுபவர் என்று தம்மைப் பற்றிச் சொல்லிக்கொண்ட திரு. எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்காவின் கொள்கைகளை அப்படியே பின்பற்றுபவர் எனக் கூறிக்கொள்ளும் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா இந்தப் பிரச்னை தீர்க்கப்படவேண்டுமென்பதில் துளிக்கூட அக்கறை கொண்டிருப்பவராகத் தெரியவில்லை.

இலங்கையிலுள்ள சகல அரசியல் கட்சிகளினது தலைவர்களும் மொழிப்பிரச்னை விரைவாகத் தீர்க்கப்படவேண்டும் எனவும், வேண்டுமானால் உடனடியாக ஒரு வட்டமேசை மகாநாட்டைக் கூட்டுமாறும் பிரதமரைக் கோரியுள்ளனர். திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் சமீபத்தில் தாம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில், "மொழிப்பிரச்னையில் நேருகாட்டிய வழியைப் பின்பற்றுவதே நேருவுக்கு நாமாற்றும் ஒப்பற்ற அஞ்சலியாகும் பிரதமர், நேருவுக்கு உண்மையிலேயே அஞ்சலி செலுத்த விரும்பினால் நேருவின் வழியில் மொழிப்பிச்னைக்குத் தீர்வு காணவேண்டும்" என்று கோரியிருந்தார்.

இந்தியாவின் உத்தியோக மொழி ஹிந்தியானாலும் ஹிந்தியைத் தாய்மொழியாகக் கொண்டிராத மக்கள்மீது பலாத்காரமாக ஹிந்தியைத் திணிக்கும் முயற்சிகள் நேருவால் மேற்கொள்ளப்படவில்லை. காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவும் 1956-ம் ஆண்டுக்குமுன் அரசாங்கசேவையில் சேர்ந்த ஊழியர்கள்சிங்களமொழிப் பரிச்சயமற்றவர்கள் என்பதற்காகப் பழி வாங்கப்படமாட்டார்கள் என்று உறுதி கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜி. ஜி. பொன்னம்பலம் கூறுவதுபோல் ஹம்பாந்தோட்டையில் உள்ளவருக்கு யாழ்ப்பாணத்திலும், யாழ்ப்பாணத்தில் உள்ளவருக்கு ஹம்பாந்தோட்டையிலும் உத்தியோகம் பார்க்கும் உரிமை இருக்க வேண்டும் ஆனால் இன்றிருக்கும் நிலை என்ன? அரசாங்கம், கட்சி அரயல் சார்பற்ற திரு. வில்மட் பெரேரா போன்ற பழுத்த அரசியல்வாதிகளின் ஆலோசனைகளை ஏற்று மொழிப் பிரச்னையைத் தீர்த்து நாட்டைப் பொருளாதார வளமுள்ளதாக்க முன் வருமா?

எஸ். ஏ. வைத்தியலிங்கம்
யாழ்ப்பாணம்

# தமிழருக்கென தனி நாடு இருக்க வேண்டும்

எங்கள் நாடு உரிமைபெறும் பொழுது ஐக்கிய தேசிக் கட்சித் தலைவர் திரு. டி. எஸ். சேனநாயக்கா தமிழுக்கும் தமிழர்களுக்கும் தக்க பாதுகாப்பு அளிப்பதாக வாக்குறுதியளித்தார். அந்த வாக்குறுதியை நம்பி எங்கள் தலைவர்கள் அவரோடு ஒத்துழைத்தார்கள். அப்போதிருந்த எங்கள் தலைவர்கள் இலங்கையின் ஒற்றுமையைப்பற்றிப் பேசினார்களேயொழிய எங்கள் உரிமைகளைச் சட்டபூர்வமாகப் பெற மறந்தார்கள். அதன் விளைவு திரு. டி. எஸ். சேனநாயக்கா எங்கள் தலைவர்களின் உதவியோடு இந்தியத் தமிழர்களின் வாக்குரிமையைப் பறித்தார். இவ்வாறு முதலாவது முறை ஐக்கிய தேசியக் கட்சியை நம்பியிருந்த நாங்கள் திரு. டி. எஸ். சேனநாயக்காவால் ஏமாற்றப்பட்டோம்.

அடுத்து சேர் ஜோன் கொத்தலாவல தமிழுக்கும் சிங்களத்திற்கும் சம அந்தஸ்து அளிப்பதாகச் சொல்லி தமிழ்பகுதியெங்கும் உலாவி வந்தார். அடேயப்பா! அப்பொழுது அவருக்கு விழுந்த பூமாலைகள், கிடைத்த வரவேற்புகள் ஏராளம்! அப்படிச் சொன்னவர் என்ன செய்தார்? களனி மகாநாட்டில் கழுத்தறுக்கும் சிங்களப் பிரேரணையைக் கொண்டு வந்தார். சிங்களக் கட்சியை நம்பியிருந்த நாங்கள் இரண்டாவது முறை சேர் ஜோன் கொத்தலாவல அவர்களால் ஏமாற்றப்பட்டோம்.

அடுத்து, எஸ். டபிள்யு ஆர். டி. பண்டாரநாயக்கா தமிழுக்கு ஓரளவு உரிமை அளிப்பதாக திரு. சா. ஜே. வே. செல்வநாயகத்துடன் ஒப்பந்தம் செய்து அப்பொழுதிருந்த நெருக்கடியைக் குறைத்துக் கொண்டார். எந்தக் கையால் ஒப்பந்தம் எழுதினாரோ அதே கையால் அந்த ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்தார். மூன்றாவது முறையாகத் திரு. பண்டாரநாயக்காவால் ஏமாற்றப்பட்டோம்.

அடுத்து தமிழரசுக் கட்சிக்கு அருமையானதொரு வாய்ப்பு ஏற்பட்டது. ஆனால் அந்த வாய்ப்பைச் சரியான முறையில் அக்கட்சி பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டது.

இத் தவறை அக் கட்சியின் மேலுள்ள வெறுப்பினால் சுட்டிக் காட்டவில்லை. அதன் மேலுள்ள அன்பினால் உரிமையோடு சுட்டிக் காட்டுகிறேன். ஐக்கிய தேசியக் கட்சியும், லங்கா சுதந்திரக் கட்சியும் அரசாங்கத்தை அமைப்பதற்குத் தமிழ் அரசுக் கட்சியின் உதவியை நாடியபொழுது அக்கட்சி நடுவுநிலைமையாக நின்றிருக்க வேண்டும். 'உரிமை தருவதாக லங்கா சுதந்திரக் கட்சி உறுதியளித்தது. அதனால் ஒத்துழைத்தோம்' எனத் தமிழ் அரசுக்கட்சி சொல்ல முடியாது. ஏனெனில் இதற்கு முதலே எழுதிய ஒப்பந்தத்தை அக்கட்சி கிழித்தெறிந்திருக்கிறது. இரண்டு பேரும் ஏமாற்றுக்காரராய் இருக்கும்பொழுது இரண்டு பேரையுமே நம்பக்கூடாது. அதைவிடுத்து அக்கட்சி லங்கா சுதந்திரக் கட்சியோடு ஒத்துழைத்தது. அதன் விளைவு? இவ்வாறு நான்காவது முறை ஏமாற்றப்பட்டோம்.

சிங்களத்திற்கும் செந்தமிழுக்கும் சம அந்தஸ்து தரவேண்டுமெனச் சொல்லிவந்த சமசமாஜக் கட்சித் தலைவர் டாக்டர் என். எம். பெரேரா தம்மை நம்பியிருந்த தமிழ்த் தோழர்களையெல்லாம் தவிக்கவிட்டுவிட்டு நிதி மந்திரியாகப் பதவி ஏற்றிருக்கிறார். இவர் எங்களுக்கு உதவி செய்வார் என நம்புவது அர்த்தமற்றது,

எங்கள் நிலைதான் இவ்வாறென்றால் இந்தியத் தமிழர்கள் நிலையும் இவ்வாறிருக்கிறதே! ஆங்கிலேயன் காலத்திலேயே ஜின்னாவைப் போல் தங்களுக்கென்று ஒரு நாட்டைப் பெற மறந்தார்கள். இன்றுவரையில் காங்கிரஸ் கட்சியின் ஒலிபெருக்கிகளாகவே நம் தலைவர்கள் உபயோகிக்கப்படுகிறார்கள். நாங்களாவது உறக்க நிலையிலிருந்து விடுபட்டிருக்கிறோம், அவர்களோ, காங்கிரஸ் கட்சி கொண்டுவருகின்ற பிரிவினைத் தடைச் சட்டத்தையோ அல்லது இந்தச் சட்டத்தையோ உணராமல் தேசிய ஒற்றுமை, தேசிய ஒற்றுமை என்று குறட்டை விட்டவண்ணம் உறங்கிக் கொண்டிருக்கிறார்கள்!

எனவே இந்தியாவிலும் சரி இலங்கையிலும் சரி, அல்லது உலகத்திலுமசரி தமிழினம் உயர்ந்த இனமாகத் தலை நிமிர்ந்து வாழவேண்டுமென்றால் தனக்கெனத் தனித்தனி நாடுகளை அமைத்துக் கொள்ள வேண்டும். இன்னொரு இனத்தை நம்புவதோ அல்லது உடன்படிக்கைகள் ஏற்படுத்துவதோ தேசிய ஒற்றுமை பேசுவதோ எம்மை முன்னேற்றப் பாதைக்கு அழைத்துச் செல்லாது!

புலவர் தமிழ் மாறன்.
கோப்பாய்.

—

## மரதன் ஓட்டப்போட்டி குமாரவேல்முதலிடம்பெற்றார்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ். மெய்வல்லுனர் கோஷ்டிநேற்று மத்திய இரண்டாவது 26 மைல் மரதன் ஓட்டப்போட்டியில் வெற்றியீட்டியவர்கள் விபரம் வருமாறு:-

1. கே. குமாரவேல் (எஸ். வி. க.)—2மணி 59 நிமி. 6-2 செக்கன்.
2. பி. எஸ். விஜயலாத— 3 மணி 9 நி. 3-3 செக்கன்,
3. எச். டி. என். சில்வா (தரைப்படை).
4. பி. எம் சமணசேன (வி. ரி. எல். எப். வி.)
5. கே. சச்சிதானந்தன் (இலங்கை வங்கி).

ஸ்கந்தவரோதய கல்லூரி முன்னாள் அதிபர் திரு. சி. சுப்பிரமணியம் போட்டிக்கு பிரதம விருந்தினராக கலந்து வெற்றியீட்டியவர்களுக்கு பரிசுகள் வழங்கினார்.

—

## பெல்மதுளை வட்டார விளையாட்டுப் போட்டி

பெல்மதுளை, ஞாயிறு

பெல்மதுளை வட்டார வருடாந்த விளையாட்டுப் போட்டி இறக்குவானை விளையாட்டு மைதானத்தில் திரு. கி. சபாரத்தினம் தலைமையில் நடைபெற்றது. விளையாட்டுப் போட்டியில் வெற்றிபெற்றவர்களுக்கு திருமதி வி. ரி. ஜி. கருணரத்ன பரிசில்களை வழங்கினார். வித்தியாதரிசி திரு. க. அகமட் பிரதம விருந்தினராக கலந்து கொண்டார்.

மலேஸியா

# டோக்கியோ உச்சிமகாநாடு தோல்வியுற்றது

## கொரில்லாச்சண்டையை மீண்டும் ஆரம்பிக்க சுகர்ணோ உத்தரவு

### 24 மணி நேரத்தில் நிலைமை மீண்டும் வக்கரித்தது

டோக்கியோ, ஜூன் 21

**டோக்கியோவில் நடைபெற்ற மலேஸிய-இந்தோனேஷிய-பிலிப்பைன்ஸ் நாட்டுத் தலைவர்களின் உச்சிமகாநாடு எவ்விதத்தீர்வுமின்றி முடிவடைந்தது. 24 மணிநேரமே மகாநாடு நடைபெற்றது. அதே சமயம் மலேஸியாவுக்கெதிரான கொரில்லா நடவடிக்கையை மீண்டும் ஆரம்பிக்கும்படி ஜனாதிபதி சுகர்ணோ உத்தரவிட்டிருப்பதாக இந்தோனேஷிய அதிகாரி ஒருவர் கூறினார்.**

ஸரவாக், போர்ணியோ எல்லையில் கொரில்லாவியக்கம் நிறுத்தப்படும் என்றும் அந்த அதிகாரி கூறினார். அதேசமயம் எல்லையில் நிறுவப்பட்டிருக்கும் மேற்பார்வை நிலைகளைக் கலைத்துவிடுமாறு மலேஸியப் பிரதமர் உத்தரவிட்டார். மகாநாட்டில் உடன்பாடு ஏற்படவில்லை என்றும் அவர் அறிவித்தார்.

கொரில்லா நடவடிக்கையை ஆரம்பிக்கும்படி உத்தரவிட்ட ஜனாதிபதி சுகர்ணோ, மலேசியாவை நசுக்கும் இயக்கம் தொடர்ந்து நடைபெறும் என்றும் அறிவித்தார்.

இனி மூன்று நாடுகளின் வெளிநாட்டு மந்திரிகளும் கூடி மற்றோர் உச்சிமகாநாட்டுக்கு ஏற்பாடு செய்ய முயல்வார்கள் என அறிவிக்கப்படுகிறது.

24 மணிநேரம் நடைபெற்ற உச்சி மகாநாட்டில் ஜனாதிபதி சுகர்ணோவும், பிரதமர் துங்கு அப்துல ரஹ்மானும் கடும் சொற்போரில் ஈடுபட்டதாகத் தெரிகிறது.

## விமான விபத்து 48 பேர் பலி

தைப்பே, ஜூன் 21

மத்திய போர்மோஸாவில் 48 பேர்களுடன் சென்ற ஒரு பிரயாணிகள் விமானம் நொறுங்கி விழ்ந்ததால் அனைவரும் கொல்லப்பட்டதாக அறிவிக்கப்படுகிறது. இதுவரை 34 சடலங்கள் மீட்கப்பட்டிருக்கின்றன.

## "தான்யவிலை அதிகரித்தால் நடவடிக்கை எடுப்பேன்"

### வர்த்தகர்களுக்கு மந்திரி சுப்ரமண்யம் எச்சரிக்கை

புதுடில்லி, ஜூன். 21

உணவு தான்யங்களின் விலைகளைக் குறைப்பதில் வர்த்தகர்கள் தம்முடன் ஒத்துழைக்க வேண்டும் என உணவுமந்திரி திரு. சுப்ரமண்யம் கேட்டுக் கொண்டார்.

முறைகேடாக நடக்கும் வியாபாரிகளுக்கெதிராக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும் என்றும் அவர் எச்சரித்தார். தான்ய விலைகள் இப்போது ஏறிவிடுகின்றன என்றும், அசாதாரண விலை ஏற்றம் ஏற்பட்டிருக்கிறதென்றும் அவர் கூறினார்.

நாட்டில் அரிசி உற்பத்தி அதிகரித்தும் கூட விலை ஏற்றம் கண்டிருக்கிறது என்றும், இதைத் நாம் அனுமதிக்கமுடியாதென்றும் சுப்ரமண்யம் கூறினார்.

முதலில் உணவு விலைகளை ஸ்திரப்படுத்தவேண்டும் என்றும், பின் அவைகளைக் கீழே கொண்டுவர வேண்டும் என்றும் மந்திரி குறிப்பிட்டார்.

பம்பாயில் உணவு தான்யங்களின் விலையைக் குறைக்க முடியுமானால் நாட்டின் இதர பகுதிகளிலும் ஏன் குறைக்க முடியாதென சுப்ரமண்யம் வினவினர்.

## 'இந்தியாவுக்கு யு. எஸ். உதவி நீடிக்கவேண்டும்'

— ரஸ்க்

வாஷிங்டன், ஜூன் 21

இந்தியப் பொருளாதார அபிவிருத்திக்கும், பாதுகாப்பு முயற்சிகளுக்கும் தனது ஆதரவை அமெரிக்கா தொடர்ந்து உறுதியுடன் அளித்துவர வேண்டுமென அமெரிக்க அயல்நாட்டுமந்திரி திரு. டீன்ரஸ்க் கூறினார்.

செனட் வெளிநாட்டு உறவுக் கமிட்டியில் அளித்த வாக்குமூலத்தில், புதிய தலைமைக்கு மாறும் முதல் கட்டத்தை இந்தியா கவர்ச்சிகரமான முறையில் கடந்துவிட்டதாகவும் ஆனால் அது கடினமான பல பிரச்னைகளை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாயும் ரஸ்க் கூறியதாக அறிவிக்கப்படுகிறது.

எனவே வருகிற ஆண்டுகளில் இந்தியப் பொருளாதார அபிவிருத்திக்கும், பாதுகாப்பு முயற்சிகளுக்கும் தான் அளிக்கும் ஆதரவில் அமெரிக்கா உறுதியாக இருப்பது முக்கியமென்று அவர் கூறினர்.

## லாவோஸில் 6 நாட்டு தூதர்கள் சந்திப்பு

வியன்டைன், ஜூன் 21

இந்தியா, பிரிட்டன், கனடா, தாய்லாந்து, தென் வியட்னும், அமெரிக்கா ஆகிய ஆறு நாடுகளின் தூதர்கள் நேற்று வியன்டைனில் லாவோஸ் பற்றி ஆலோசனை நடத்தினர். அவர்கள் ஒரு அறிக்கையைத் தயாரித்திருப்பதாயும், தங்கள் அரசாங்கங்கள் அதை ஏற்ற பின் அடுத்த வாரம் கூட்டத்தை முடித்துக்கொள்ள விருப்பதாயும் அறிவிக்கப்பட்டது.

அதேசமயம் லாவோஸில் அமெரிக்க, தாய்லாந்து விமானிகள் பதட்லாவோ இலக்குகள் மீது பறந்துவருவதாகப் பதட்லாவோ தலைவர் குற்றஞ்சாட்டியிருப்பதை அமெரிக்கா மறுத்துள்ளது.

லாவோஸ் சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனைச் சென்ற ஆண்டு இறுதிமுதல் பகிஷ்கரித்து வந்த போலந்து மீண்டும் அதில் கடமையாற்ற முன்வந்திருக்கிறது. போலந்தின் தீர்மானம் புதுடில்லியில் வரவேற்கப்படுகிறது.

## பக்தவத்சலம் இன்னும் சிலநாள் ஆஸ்பத்திரியில் இருப்பார்

சென்னை, ஜூன் 21

"ஆஸ்பத்திரியில் தான் இன்னும் ஒருவாரம் தங்கிச் சிகிச்சைபெறவேண்டும்" என டாக்டர்கள் கூறியிருப்பதாய் முதன்மந்திரி பக்தவத்சலம் நேற்றுமுன் தினம் நிருபர்களிடம் கூறினர்.

திரு. பக்தவத்சலம் சிகிச்சை பெறும் அறை 'ஏர்கண்டிஷன்' செய்யப்பட்டுவருகிறது.

சிறிதளவு காய்ச்சல் இருப்பதாக டாக்டர்கள் கூறுகின்றனர். ஆனால் எனக்கு அப்படியொன்றும் தெரியவில்லையென்றும் முதன்மந்திரி கூறினர்.

இடதுகைக் கட்டைவிரலில் வலி மிகவும் கடுமையாயிருக்கிறது. இப்போது போடப்பட்டுள்ள பிளாஸ்டர் அகற்றப்பட்டு கட்டுப்போடப்படலாமென்றும் அவர் தெரிவித்தார்.

முதன்மந்திரிக்கு ஓய்வு அவசியமென்றும், ஆகையால் பார்வையாளர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் அவர் அறைக்கெதிரே பெரிய நோட்டீஸ் ஒட்டப்பட்டிருக்கிறது.

அவரது தேகநிலைமை குறித்து ஏராளமான கடிதங்கள் வந்துகொண்டிருக்கின்றன. காங்கிரஸ் அக்ராசனர் திரு. காமராஜ் டெலிபோன் மூலம் விசாரித்தார்.

ராஷ்டிரபதி ராதாகிருஷ்ணன், பிரதமர் சாஸ்திரி, ஸ்ரீ நந்தா, சென்னை கவர்னர், யூனியன் மந்திகள், ராஜாஜி, ராஜ்ய முதன்மந்திரிகள் ஆகியோரிடமிருந்தும் செய்திகள் வந்திருக்கின்றன.

## நடுக்கடலில் மூழ்கிவரும் பனமா கப்பல்

### உயிர்ப்படகுகள் மூலம் சிப்பந்திகள் வெளியேற்றம்

சென்னை, ஜூன் 21

சென்னையிலிருந்து 350 மைல் தூரத்தில் "யூனியன் அட்லாண்டிக்" என்ற பனமா நாட்டு சரக்குக் கப்பல் மூழ்கிக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. கப்பலில் துவாரங்கள் ஏற்பட்டது காரணமாக இந்த நிலை ஏற்பட்டது.

சிப்பந்திகள் உயிர்ப்படகுகள் மூலம் கப்பலை விட்டுச் சென்றுகொண்டிருப்பதாய்க் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறின. கப்பலிலிருந்து சென்னைக்கு ஆபத்துச் செய்தி கிடைத்தவுடன் அப்பகுதியிலுள்ள கப்பல்களை உதவிக்குச் செல்லுமாறு உத்தரவிடப்பட்டது. ஆனால் மூழ்கும் கப்பலுக்கு ஆக அருகிலுள்ள கப்பல் கூட 150 மைல் தூரத்திலிருந்ததால், 38 சிப்பந்திகளும் மூழ்கும் கப்பலை விட்டு வெளியேறினர்கள் எனக் கூறப்பட்டது.

பாரத படை விமானம் ஒன்று அடையாளம் காட்டுமுகமாக கப்பலை நோக்கிப் பறந்து சென்றது. மேலும் இரு பாரத கப்பல்களுக்கு ஸ்தலத்துக்கு விரைந்து செல்லுமாறு உத்தரவிடப்பட்டிருக்கிறது. மூழ்கும் கப்பல் இரும்புக் கனிசங்களுடன் சிங்கப்பூர் சென்றுகொண்டிருந்தது.

## கேரளத்தில் வகுப்பு கலவர முயற்சி

### முதன் மந்திரி எச்சரிக்கை

திருவனந்தபுரம், ஜூன் 21

கேரளத்தில் வகுப்புக் கலவரத்தைத் தோற்றுவிக்க சிலர் திட்டமிட்ட முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகத் தெரிகிறதென முதன் மந்திரி சங்கர் அறிவித்தார்.

குற்றவாளிகளைப் பிடிக்க ஆவன செய்யப்படுமென்றும், மக்கள் தீய பிரசாரங்களைக் கேட்டு வழி தவறிச் செல்ல வேண்டாமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். கிறிஸ்தவ தேவாலயங்களைத் தாக்க முயற்சிகள் செய்யப்பட்டதாயும் சங்கர் குறிப்பிட்டார.

சிவில் உரிமை

## மசோதா நிறைவேறியதற்கு நீக்ரோ தலைவர்கள் வரவேற்பு

வாஷிங்டன், ஜூன் 21

சிவில் உரிமை மசோதா அமெரிக்க செனட்சபையில் நிறைவேற்றப்பட்டதை நீக்ரோ தலைவர்கள் வரவேற்றிருக்கின்ளுர்கள்.

நீக்ரோக்களின் வாழ்வில் பல ஆண்டுகளுக்குப் பின் மிக முக்கிய அபிவிருத்தி ஏற்பட்டிருப்பதாகவும், நீக்ரோக்களின் நிலையை இது உயர்த்துமென்றும் ரெவரன்ட் மார்ட்டின் லூதர்கிங் கூறினர்.

நீக்ரோக்களின் பாதுகாப்புக்கு வழிசெய்யப்பட்டிருப்பதாய் ராய் வில்கின்சன் என்ற மற்றோர் நீக்ரோ தலைவர் தெரிவித்தார்.

பல ஆண்டுகளுக்குப் பின் மிக முக்கிய சட்டம் இயற்றப்பட்டிருக்கிறதென மற்றோர் தலைவர் கூறினர்.

## பெரம்பூர் தொழிற்சாலை

சென்னை, ஜூன் 21

1956-ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பெரம்பூர் ரயில் பெட்டி தொழிற்சாலையில், உற்பத்திகாரணமாக இதுவரை 36 கோடியே 12 லட்சம் ரூபாய் வெளிநாட்டுச் செலவாணியில் மிச்சம் ஏற்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது. இதுவரை 3400 ரயில் பெட்டிகளை அது தயாரித்திருக்கிறது.

## டெஸ்ட் கிரிக்கெட்

லண்டன், ஜூன் 21

இங்கிலாந்துக்கும் ஆஸ்திரேலியாவுக்குமிடையே லாட்ஸில் நடைபெறும் கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில், ஆஸ்திரேலியா 176 ரன்கள் எடுத்து அவுட்டாகியது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் 1 விக்கெட் நஷ்டத்திற்கு 26 ரன்கள் எடுத்தது.

## தி. மு. க. பொதுக்குழு

சென்னை, ஜூன் 21

ஜூலை மாதம் 11, 12-ம் திகதிகளில் கும்பகோணத்தில் திராவிடமுன்னேற்ற கழகத்தின் பொதுக்குழு கூடும். வழக்கமாக 6 மாதத்திற் கொருமுறை கூடும் இந்தக் கூட்டம் மூன்றுமாதத்திற்குமுன்பே நடந்திருக்கவேண்டும். அண்ணுதுரை சிறையில் இருந்ததால் இது ஒத்திவைக்கப்பட்டது.

## டில்லியில் மிக்கோயன்

புதுடில்லி, ஜூன் 21

புதுடில்லி வந்திருக்கும் ரஷ்ய உதவிப் பிரதமர் திரு. மிக்கோயன் நேற்று பிற்பகல் ஜனாதிபதி ராதாகிருஷ்ணனுடன் தேநீர் அருந்தினர். பின் ஸ்ரீமதி இந்திராகாந்தி, பாதுகாப்புமந்திரி திரு. சாவன், திரு. டி. டி. கிருஷ்ணமாச்சாரி, பிரதமர் சாஸ்திரி ஆகியோரைச் சந்தித்தார்.

சைப்பிரஸ்

## ஐ. நா. படையை நீடிக்க முடிவு

நியூயோர்க், ஜூன் 21

சைப்பிரஸில் ஐ. நா. படைகளை மேலும் 3 மாதம் வைத்திருப்பதென்ற யுதாண்டின் கோரிக்கையைப் பாதுகாப்புச் சபை அங்கீகரித்தது. வருகிற சனிக்கிழமை படை இயங்கும் காலம் முடிவடைகிறது. அதன் பின் படைகளின் பொறுப்பை இந்தியாவைச் சேர்ந்த ஜெனரல் திம்மையா ஏற்பார் என அறிவிக்கப்பட்டது.

## 17-வது திருத்த சட்டம்

புதுடில்லி, ஜூன் 21

நில உச்சவரம்புச்சட்டம் சம்பந்தமான 17 வது சட்டத் திருத்த மசோதாவுக்கு ஜனாதிபதி ராதாகிருஷ்ணன் அங்கிகாரம் அளித்துவிட்டதாய் அறிவிக்கப்பட்டது.

இந்தியாவில்

## ஆயுள்வேத ஆய்வு கமிட்டி

புதுடில்லி, ஜூன் 21

ஆயுள் வேத வைத்தியத் துறையில் புராதன காலந் தொட்டு எழுதப்பட்ட ஓடுச்சுவடிகளையும் தஸ்தாவேஜுக்களையும் சேகரித்து ஆராய்ந்து தொகுப்பதற்கென பாரத அரசாங்கம் ஆய்வுக் கமிட்டி ஒன்றை அமைக்க தீர்மானித்துள்ளது.

# 'பிரஜா உரிமைச் சட்டம்பற்றி நேருவுடன் கலந்திருக்க வேண்டும்

## அப்படியானல் பிரச்னை எப்போதோ தீர்ந்திருக்கும்'

—சுந்தரலிங்கம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

"பாரதப் பிரதமர் நேருவைக் கலந்து ஆலோசித்தபின் இலங்கை பாராளுமன்றத்தில் பிரஜா உரிமைச் சட்டத்தை கொண்டுவந்திருந்தால் இலங்கை, இந்தியர் பிரச்னைகளுக்கு எப்பவோ முடிவு காணப்பட்டிருக்கும். நேருவை கலந்து ஆலோசிக்காமல் அச்சட்டத்தைகொண்டு வந்ததினுல்தான் நான் அதற்கு எதிராக வாக்களித்தேன்."

யாழ்ப்பாணம் நகரசபை மண்டபத்தில் நேற்று மாலை திவ்யஜீவனசங்க ஆதரவில் நடைபெற்ற நேருஜி மறைவுக்கான அனுதாபக் கூட்டத்தில் பேசும்போது ஈழத்தமிழர் ஒற்றுமை முன்னணித் தலைவரும் முன்னுள் வவுனியா எம். பி.யுமான திரு. சி. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு கூறினர்.

ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. எஸ். தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. சுந்தரலிங்கம் தொடர்ந்து கூறியதாவது:

1939-ம் ஆண்டு இந்தியர்கள்பற்றி பேச்சுவார்த்தை நடாத்த காந்திஜீ நேருவை இங்கு அனுப்பியிருந்தார். இலங்கையிலிருந்து யார் அதிகம் இந்தியர்களை அனுப்புவதென்று காலஞ்சென்ற டி. எஸ். சேனநாயக்கா, சர் ஜோன் கொத்தலாவலை, காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்கா ஆகியவர்களிடையே போட்டி ஏற்பட்டிருந்தது. எல்லோரையுமே திருப்பி அனுப்ப வேண்டுமென்று சர் ஜோன் கொத்தலாவலை கூறினர். கடைசி இந்தியன் இலங்கையைவிட்டுச் செல்லும்வரை நிம்மதியாக சாகமாட்டேன் என்று பண்டாரநாயக்கா கூறினர். பாரதப்பிரதமர் நேரு சிங்களத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினர். அது பலனளிக்காததால் மறுநாள் இந்தியா செல்ல நேரு திட்டமிட்டார், இவ்விஷயம் எனக்கு அறிவிக்கப்பட்டது. டெலிபோன்மூலம் டி. எஸ். சேனநாயக்காவுடனும் நேருவுடனும் தொடர்பு கொண்டு மறுநாள் இதுபற்றி மீண்டும் பேசுவதென ஒழுங்கு செய்தேன்.

எல்லோரும் சந்தித்துபேச்சுவார்த்தையை ஆரம்பித்தோம். நான் நேருவிடம் ஒரேஒரு கேள்வியை மட்டும் கேட்டேன். அத்துடன் அப்பிரச்னைக்கு நல்லமுடிவு காணப்பட்டது. நான்கேட்டகேள்வி இதுதான். 'தற்பொழுது இந்தியா அடிமை நாடாக இருக்கிறது. பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகள் சீனர்களை இந்தியாவிற்கு அழைத்துவந்து இந்தியாவிலுள்ள செல்வங்களை சுரண்டி சீனாவிற்கு கொண்டுபோக அனுமதியளித்தால் நீங்கள் சம்மதிப்பீர்களா?' இந்தக் கேள்விக்கு நேருவால் பதில் சொல்ல முடியாமல் போய்விட்டது. உடனடியாக இந்தியா சென்று இனிமேல் இந்தியர்கள் இலங்கைக்கு செல்லக்கூடாதென்று அறிவித்தார். நீதியான முறையில் நடந்தார் நேரு. இப்படியான நல்ல குணம் படைத்த நேருவுடன் கலந்து ஆலோசித்தபின் பிரஜா உரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்திருந்தால் பிரச்னை தீர்ந்திருக்கும். இலங்கைக்கு இந்தியர்கள் செல்லக் கூடாதென சட்டம் போடப்பட்ட பின்பும் இரண்டாவது உலகமகாயுத்தத்தின் போது, றப்பர் தோட்டத்திற்கு வேலைசெய்ய இந்தியர்கள் வேண்டுமென்று இங்கிருந்து மந்திரிகள் சென்று மன்றாடினர்கள். நேரு எதையும் முன்கூட்டியே சொல்லக்கூடியவர். முதல்தடவை அவர் இலங்கைக்கு வந்தபோது தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு. பொன்னம்பலத்தைத் தவிர மற்ற எல்லோரும் டொனமூர் அரசியல் திட்டத்தை பகிஷ்கரித்து சட்டசபைக்கு போகாமலிருந்தார்கள். இதுபற்றி நேருவிடம் அபிப்பிராயம் கேட்கப்பட்டது. இந்த நேரத்தில் சட்டசபையை பகிஷ்கரிப்பது சரியல்ல. இதனுல் பின்பு கஷ்டங்கள் ஏற்படும் என்றும் கூறினர். அதன்படியே இன்று நடந்துவிட்டது.

இந்திய விடுதலைக்காக போராடியவர்கள் கடைசிவரை கொள்கையை விடவில்லை. நேருவின் மகளான இந்திரா பலத்த அடிகள்வாங்கியபோதும் கையிலிருந்த கொடியை விடவில்லை. அவ்விதம் அவர்களுக்கு சுதந்திர உணர்ச்சி ஊட்டப்பட்டிருந்தது. 'வெள்ளையனே வெளியேறு' என்று ஒன்றுசேர்ந்த குரலை எழுப்பினர்கள். வெள்ளையனுக்கு எதிராக கறுப்புக் கொடி காட்டினர்கள். ஆனல் சுதந்திரத்திற்காக போராடிய அதே நேரத்தில் பின்கதவால் சென்று வெள்ளையனிடம் உத்தியோகத்திற்காகவும் பட்டம் பதவிகளுக்காகவும் மன்றாடவில்லை. அதனல்தான் அவர்கள் சுதந்திரம் பெற்றுர்கள். சுதந்திரம் பெற வேண்டும் என்ற காரணத்திற்காக உயர் பதவிகளையும் பட்டங்களையும் உதறித் தள்ளினர்கள். வருடக்கணக்கில் சிறையில் வாடினர்கள். நேரு, காந்திபோன்ற பெரியார்கள் சுதந்திரம் கோரிய அதேநேரத்தில் வெள்ளையனிடம் தங்கள் பிள்ளைகளுக்கு உத்தியோகம் பெறுவதற்காக இரகசியமாக சந்திக்கவில்லை. உத்தியோகத்தையும் சம்பளத்தையும் அவர்கள் துரும்பென மதித்தார்கள். விடுதலைக்கு போராடிய இந்திய மக்களுடன் நம்நாட்டு மக்களையும் ஒப்பிட்டுப் பாருங்கள், இங்கு எத்தனைபேர் சிறை சென்றுர்கள்? தியாகம் செய்தார்கள்? உயர்பதவிகளையும் பட்டங்களையும் யார் உதறித் தள்ளினர்கள்? நேருவின் புகழைப்பற்றி பேசும் நாம் அவரின் வாழ்க்கையை பின்பற்ற வேண்டும். அவர் முன்வைத்தகாலை பின் வைக்கவில்லை. ஆரம்பத்தில் எதிர்ப்பு தெரிவித்துவிட்டு இறுதியில் ஒத்துழைக்கவில்லை. விடுதலை கிடைக்கும்வரை எதிர்ப்புத் தெரிவித்தார். ஈழத்தமிழ் மக்களும் அவரின் வாழ்க்கையை பின்பற்றி தங்கள் விடுதலைக்காக பணியாற்ற வேண்டும்.

### மூன்றுமுறை பூமி அதிர்ந்தது

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசும்போது கூறியதாவது: நேருவின் இறுதியாத்திரை புதுடில்லியில் ஆரம்பமானபோது பூமிஅதிர்ச்சி ஏற்பட்டது. முன்பும் இத்தடவை பூமிஅதிர்ச்சி ஏற்பட்டதாக சரித்திரத்தின் மூலம் அறிகிறேம். யேசுகிறிஸ்துநாதர் மறைந்தபோதும் புத்தர்பகவான் பிரிந்தபோதும் பூமியதிர்ச்சி ஏற்பட்டது.

அதேபோல் இந்திய மக்களின் விடுதலைக்காக தன்னையே தியாகம் செய்தவரின் இறுதி யாத்திரையின்போதும் பூமியதிர்ச்சி ஏற்பட்டது. பாரத சரித்திரத்தில் எத்தனையோ அரசாங்கமும் அரசர்களும் இருந்தபோதிலும் பாரதப்பிரதமர் நேருவிற்குப் போல மக்கள் ஆதரவு இருந்ததில்லை. அர்ச்சுனனின் வீரமும் புத்தரின் அன்பும், வளளுவனின் அறிவும் அவரிடம் ஒருங்கே அமைந்திருந்தன.

### மக்களுக்காக வாழ்ந்தார்

நேருவிற்கு விழா எடுப்பது அவர் பாரதப் பிரதமர் என்பதற்காக மட்டுமல்ல, தன்னைக் கூட்டில் நிறுத்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்திய அரசாங்கத்திடம் "இன்று என்னை கூட்டில் நிறுத்துகிறீர்கள். முழு ஏகாதிபத்தியத்தையும் கூட்டில் நிறுத்த வேண்டிய காலம் வரும்" என்றுகூறியதற்காகவே முசோலினியை பார்க்க எல்லா நாட்டு தலைவர்களும் துடித்தபோது இந்தியா அடிமை நாடாக இருந்தபோதிலும் முசோலினியைப் பார்க்க மறுத்துவிட்டார் நேரு. ஹிந்தி பேசாத மக்கள் விரும்பும் வரை ஆங்கிலம் அரசமொழியாக நீடிக்கும் என்று கூறினர் நேரு. இப்படிப்பட்ட பெருந்தன்மையான மனிதரை மக்கள் எப்படித்தான் மறக்க முடியும். இந்தியாவின் சுதந்திரத்திற்காக தன் வாழ்க்கையையே அர்ப்பணித்தார். எந்த இனமும் நாடும் அடிமையாக இருக்கக் கூடாதென்பதற்காக போராடினர். மக்கள் சுபிட்சமாக வாழவேண்டும் என்பதற்காக போராடினர். இந்திய மக்களின் தியாகத்தினல்தான் இலங்கைக்கும் சுதந்திரம் கிடைத்தது. இந்தியாவின் சுதந்திரம் பறிபோகுமானல் நமது சுதந்திரமும் பறிபோய்விடும். நமது எல்லை கடலல்ல, ஹிமாலயம் தான் நமது எல்லை. சுதந்திர பாரதத்தில் ராம ராஜ்யம் இருக்கும்வரை இலங்கைக்கு ஆபத்தில்லை. நேருவின் வாழ்க்கையைப் பின்பற்றி அவரின் சமாதான வழியைக் கடைப்பிடிக்க பழகிக் கொள்ளவேண்டும்.

### முழு உலகிற்கே சொந்தமானவர்

முன்னுள் செனட்டர் எஸ். ஆர். கனகநாயகம் பேசும்போது கூறியதாவது:-

நேரு என்ற நாமம் இந்தியாவிற்கு மட்டுமல்லாது இலங்கைக்கும், முக்கியமாக தமிழ் பேசும் மக்களுக்கும் ஒரு மந்திரமாக அமைந்துவிட்டது. காந்திஜி சுடப்பட்டதும் உலகம் திகிலடைந்தது. இந்திய மக்கள். ஏங்கினர்கள். ஆனல் அவர் மறைந்தாலும் அவரது பிரதம சீடரான நேரு இருப்பதால் பயமில்லை என்று மக்கள் மனதைத் தேற்றிக்கொண்டார்கள் நேருவைப் பற்றி அறியாதவர்கள் உலகத்தில் யாருமே இல்லை.

தமிழ்க் காங்கிரஸ் பிரமுகர் திரு. ஆர். என். சிவப்பிரகாசம் பேசும் போது கூறியதாவது:-

இந்தியாவிலுள்ள விடுதலை வீரர்கள் அரசியலை நன்கு அறிந்திருந்தார்கள். அங்கு தோன்றியதுபோல இங்கு சுதந்திர புருஷர்கள் அவதரிக்கவில்லை. இந்த நாட்டின் விடுதலைக்காக என்ன செய்தோம்? மக்கள் எந்தக் கோணத்திலிருந்தாலும், எக்கட்சியிலிருந்தாலும் ஒன்று சேர்ந்து விடுதலைக்குரல் எழுப்பினர்கள். கொண்ட கோபத்தினலும் சுயநல கௌரவத்தினலும் அவர்கள் புதிய கட்சிகள் ஆரம்பிக்கவில்லை. மனஸ்தாபங்களை எல்லாம் மறந்து சிறு பிரச்னைகளையெல்லாம் மனதில் வைக்காது நாட்டின் விடுதலைக்காக பாடுபட்டார்கள். நல்ல குருவின் கீழ் அவர்கள் பயிற்சி பெற்றுர்கள், காங்கிரஸ் கட்சிக்குள்ளே எத்தனையோ, பிளவுகள் கோஷ்டிகள் இருந்தது. ஆனலும் பிளவு ஏற்படவில்லை. பாரதப் பிரதமர் நேருவே தகப்பனராகிய மோதிலால் நேருவுடன் சிறு விஷயங்களில் மாறுபட்டிருந்தார். அதற்காக நேருவோ அல்லது அவரின் தகப்பனரோ காங்கிரஸைவிட்டுச் சென்று புதிய கட்சியை ஆரம்பிக்க முயலயவில்லை. அவர்களின் எண்ணங்களெல்லாம் நாட்டின் விடுதலையில் தான்; சிந்தனைகள் எல்லாம் சுதந்திரத்தில் தான். வேறுபட்ட கருத்துக்கள் இருந்தாலும் காங்கிரஸிலிருந்துகொண்டே வெள்ளையனை எதிர்த்து வந்தார்கள். அதனுல்தான் அவர்கள் சுதந்திரம் பெறமுடிந்தது. சுபாஸ் சந்திரபோஸிற்கும் மகாத்மா காந்திக்கும் சில விஷயங்களில் மாறுபாடு ஏற்பட்டது. அப்படியிருந்தும் சுபாஸ், காங்கிரஸைப்பற்றி தவளுக கூறவில்லை. மகாத்மாகாந்திக்கு எதிராக பிரசாரம் செய்யவில்லை இருவரும் விடுதலையையே கருத்தில்கொண்டு வெவ்வேறு வழியில் பணியாற்றினர்கள். அதனுல்வெற்றிகண்டார்கள் ஆனல் இங்கு நிலைமை அப்படியா?

### தியாகிகள் இங்கு தோன்றவேண்டும்

நேரு போன்ற சுயநலமற்ற தியாகிகள் இங்கு தோன்றினுல்தான், தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை பெறமுடியும். எல்லாக் கட்சிகளும் ஒருங்குசேர்ந்து பாரத விடுதலைக்காகப் போராடின அநேக கட்சிகள் இருப்பதால் ஒருவித பயனும் ஏற்படப்போவதில்லை. சின்னஞ்சிறு விஷயங்களில் வேறுபட்டவர்களாக இருந்தாலும் ஒன்றுசேர்ந்து போராடினுலே வெற்றிகாணமுடியும். தமிழ்மக்கள் பழைய நிலையடைய வேண்டுமானுல், ஒற்றுமைப்பட்டு உரிமைக்காக நேரு காட்டிய வழியில் போராடவேண்டும்.

செல்வி புஷ்பா செல்வநாயகம் பேசும்போது கூறியதாவது:—

நேரு என்ற பதத்திற்கு உலக அகராதியில் எத்தனை எத்தனையோ கருத்துக்கள், பற்பல வியாக்கியானங்கள் கூறப்படுகிறது. நேர்மை, நீதி, அன்பு, தயை, தாட்சண்யம், சமாதானம் என்ற பல கருத்துக்கள் நிலவுகிறது. நேருவிடமிருந்து கற்றுக்கொள்ளக் கூடிய எவ்வளவோ பாடங்கள் இருக்கிறது. சீனுவின் ஆதிக்கத்தை வெறுத்தார் ஆனல் சீனரை வெறுக்கவில்லை, எதிர்க்கட்சியினரின் கொள்கைகளை வெறுத்தார். ஆனல் எதிர்க்கட்சியினரை வெறுக்கவில்லை. பிரிட்டிஷ் அரசாங்கத்தை எதிர்த்தார். ஆனல் பிரிட்டிஷ் மக்களை எதிர்க்கவில்லை.

தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

### நேருவின் வழியை பின்பற்றவேண்டும்

சொல்வது சுலபம், செய்வது கஷ்டம். நேரு பேச்சில்மட்டும் இருந்துவிடாமல் செயலிலும் இறங்கினர். தனது மனைவி கமலாவின் பரம்பரைச் சொத்தான நகைகளை சுதந்திர இயக்கத்திற்காக அளித்தார். நேரு இளமையில் சாகவில்லை. காந்திஜியைப்போல படுகொலை செய்யப்படவில்லை. ஆனுலும் இன்றுகூட உலக மக்கள் கண்ணீர் விட்டுக்கொண்டிருக்கிருர்கள். காரணம் மக்கள் உள்ளங்களில் அழியா இடம் பெற்றுவிட்டர். 17 வருடங்களாக பிரதமராக இருந்தார் என்பதற்காக மக்கள் கண்ணீர் விடவில்லை நாட்டின் விடுதலைக்காக 14 வருடங்கள் சிறையிலிருந்தார் என்பதற்காகவே கண்ணீர்விட்டனர். நேரு காட்டிய வழியைப் பின்பற்றி இலங்கையிலுள்ள தமிழ்பேசும் மக்களும் சுதந்திரத்திற்காக போராடவேண்டும். அவரை ஞாபகத்தில் வைத்துச்கொள்வதற்கு இதுதான் வழி.

சமசமாஜக் கட்சிப்பிரமுகர் கே. வி. எஸ். சண்முகநாதன் பேசும்போது, ஆங்கிலேயர்களை நேரு எதிர்த்துவந்தபோதிலும் அவர் ஆங்கிலத்தில் ஒரு சிறந்த எழுத்தாளர் மட்டுமன்றி சிறந்த பேச்சாளராகவும் இருந்தாரென்றும், சோஷலிஸ சமுதாயம் ஒன்றை உருவாக்க திட்டமிட்டு அதன்படி உழைத்துவந்தாரென்றும் அவர் நாட்டின் விடுதலைக்காக பட்ட துன்பங்கள் கணக்கிலடங்காவென்றும் கூறினர்.

யோகிராஜ் சச்சிதானந்தா பேசும்போது ஒவ்வொரு கட்சியினரும் நேருஜியைத் தங்கள் கட்சியுடன் இணைத்துப் பேசக்கூடிய விதத்தில் அவர் வாழ்ந்தார் என்றும், எதிர்க்கட்சியினருக்கும் மதிப்புக் கொடுத்த காரணத்தினுல் தான் இன்று உலகம் முழுதும் அவரைப் போற்றுகிறதென்றும் கூறினர்.

# 'விரும்பத்தகாதோர் பட்டியல்' விரைவில் தயாராகும்

## அந்நியர் வருகையைத் தடுக்க அரசினர் முயற்சி

கொழும்பு, ஞாயிறு

இலங்கை அரசாங்கம், 'விரும்பத்தகாதவர்கள்' என்று தான் கருதுவோரை, அவர்கள் இலங்கையில் புகுவதற்குரிய பாஸ்போர்ட், விஸா முதலிய பத்திரங்களை உடையவர்களாக இருந்தபோதிலும் இந்நாட்டுடுன் புகவிடாது தடுப்பதெனத் தீர்மானித்துள்ளது. இதற்காகச் 'சந்தேகத்துக்குரியோர் பட்டியல்' ஒன்றும் தயாரிக்கப் பட்டுவருகிறது.

'சந்தேகத்துக்குரியோர் பட்டியல்' புதியபெயர்களைச்சேர்ப்பதற்காகவும், அந்த அந்தநாட்டில் யாரை அரசாங்கம் சந்தேகத்துக்குரியவர்கள் எனக் கருதுகிறது என்பதைத்தெரிவிப்பதற்காகவும் வெளிநாடுகளிலுள்ள இலங்கை ஸ்தானிகராலயங்களுக்கு அனுப்பப்படும்.

சந்தேகத்துக்குரியோர் பட்டியலில் இடம்பெற்றிருப்பவர்களிற் சிலர் பிரபல பிரிட்டிஷ்பத்திரிகைகள் சிலவற்றின் வெளிநாட்டு நிருபர்கள் எனத்தெரிய வருகிறது. இவர்களுடைய பெயர்கள் இந்தப் பட்டியலிற் சேர்க்கப்பட்டிருப்பதற்கு அவர்கள் இலங்கையைப்பற்றி நீதியற்ற முறையில் உண்மையற்ற செய்திகளைத் தமது பத்திரிகைக்கு அனுப்பியதே காரணம் என அரசாங்க வட்டாரங்கள் கருத்துத் தெரிவித்தன.

வெளிநாட்டார் ஒருவரின் பெயர்கள் இந்தப் பட்டியலிற் சேர்க்கப் பட்டிருக்கிறதென்ருல் அவரது வருகையால் இலங்கையின் நலன்கள் பாதிக்கப்படும் என்று இலங்கை அரசாங்கம் கருதுகிறதென்பதே கருத்து என அரசாங்க உயர் அதிகாரி ஒருவர் கூறினர்.

இலங்கையிற் புகுவதற்கு விஸா பெறும் அவசியமற்ற பிரிட்டிஷ் அவுஸ்திரேலியப் பிரஜைகளானுலும் அவர்களது பெயர்கள் இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருக்குமானுல் அவர்கள் இந்த நாட்டுக்குள் அனுமதிக்கப்படவே மாட்டார்கள் என்றும் அந்த அதிகாரி வலியுறுத்திஞர்.

### அகதிகள்

புதுடில்லி, ஜூன் 21

கிழக்கு பாகிஸ்தான் அகதிகளை அந்தமான், நிக்கோபாரில் குடியேற்றுவதற்கான திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

# உடுப்பிட்டி தொகுதி தமிழ் பாடசாலைகள் விளையாட்டுப் போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, ஞாயிறு

உடுப்பிட்டிப் பகுதித் தமிழ் பாடசாலைகள் மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி நேற்று கரவெட்டி விக்கினேஸ்வராக் கல்லூரி மைதானத்தில் நடை பெற்றது.

ஒவ்வொரு போட்டிகளிலும் முதல் மூன்று இடத்தையும் பெற்ற பாடசாலைகளின் விபரம் வருமாறு:

100 மீற்றர் ஓட்டம் (19 வயதுக்குக் கீழ் ஆண்கள்) யார்க்கரு விநயகர் வித்தியாசாலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, இமையாணன் அ. த. க. பாடசாலை.

100 மீற்றர்-13 வயதுக்குள் ஆண்கள்: இமையாணன் அ. த. க. பாடசாலை, துன்னாலை வடக்கு இ. த. க. பாடசாலை, யார்க்கருவிநயகர் பாடசாலை.

80 மீற்றர்-13 வயதுக்குள் பெண்கள்: இமையாணன் அ. த. க. பாடசாலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, இமையாணன் அ. த. க. பாடசாலை.

200 மீற்றர்-19 வயதுக்குள் ஆண்கள்: யார்க்கருவிநயகர் பாடசாலை, யார்க்கரு விநயகர் பாடசாலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை,

150 மீற்றர்-13 வயதுக்குள் ஆண்கள்: இமையாணன் அ. த. க. பாடசாலை, யார்க்கரு விநயகர் பாடசாலை, துன்னாலை வடக்கு இ. த. க. பாடசாலை.

100 மீற்றர்-13 வயதுக்குள் பெண்கள்: வதிரிரோமன் கத்தோலிக்க பாடசாலை, இமையாணன் அ. த. க. பாடசாலை.

100 மீற்றர்-16 வயதுக்குள் பெண்கள்: வல்வெட்டி இ. த. க பாடசாலை, வதிரி ரோமன் கத்தோலிக்க பாடசாலை, கம்பர் மலை அ. த. க. பாடசாலை.

100 மீற்றர்-16 வயதுக்குள் ஆண்கள்: இமையாணன், கம்பர் மலை(1), கம்பர் மலை (1)

400 மீற்றர்-19 வயதுக்குள் ஆண்கள்: யார்க்கரு விநயகர், கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, துன்னாலை வடக்கு இ. த. க. பாடசாலை.

200 மீற்றர் 16 வயதுக்குள் ஆண்கள்: கம்பர் மலை (1), கம்பர் மலை (1), இமையாணன்.

150 மீற்றர்-16 வயதுக்குள் பெண்கள்: வல்வெட்டி இ. த. க. பாடசாலை, இமையாணன், கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை,

100 மீற்றர்-19 வயதுக்குள் பெண்கள்: வதிரி ரோமன் கத்தோலிக்க பாடசாலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, யார்க்கருவிநயகர்.

60 மீற்றர் -10 வயதுக்குள் பெண்கள்: வராத்துப்பளை த. க. பாடசாலை, யார்க்கரு விநயகர், இமையாணன் அ. த. க. பாடசாலை.

60 மீற்றர்- 10 வயதுக்குள் ஆண்கள்: நெல்லியடி மெ. மி. பாடசாலை, இமையாணன், வல்வெட்டி இ. த. க. பாடசாலை.

200 மீற்றர்- 19 வயதுக்குள் பெண்கள்: கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, துன்னாலை வடக்கு இ. த. க. பாடசாலை, வதிரி ரோமன் கத்தோலிக்க பாடசாலை.

800 மீற்றர் -19 வயதுக்குள் ஆண்கள்: கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, வராத்துப்பளை த. க. பாடசாலை, யார்க்கரு விநயகர்.

உயரம் பாய்தல்- 16 வயதுக்குள் ஆண்கள்: இமையாணன், கம்பர்மலை, இமையாணன்.

நீளம் பாய்தல்- 13 வயதுக்குள் ஆண்கள்: துன்னாலை வடக்கு இ. த. க. பாடசாலை, இமையாணன், கம்பர்மலை.

குண்டெறிதல் -19 வயதுக்குள் ஆண்கள்: கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, இமையாணன்.

பணிஸ் ஓட்டம்- 10 வயதுக்குள் ஆண்கள்: இமையாணன், கரவெட்டி ரோமன் கத்தோலிக்க பாடசாலை, இமையாணன்.

நீளம் பாய்தல்- 16 வயதுக்குள் ஆண்கள்: இமையாணன், இமையாணன், கம்பர் மலை.

உயரம் பாய்தல்- 13 வயதுக்குள் ஆண்கள்: கம்பர்மலை, இமையாணன், இமையாணன்.

பரிதிவட்டம்-19 வயதுக்குள் ஆண்கள்: இமையாணன், கரணவாய் வடக்கு இ. த. க. பாடசாலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை.

குண்டெறிதல்-16 வயதுக்குள் ஆண்கள்: இமையாணன், யாக்கருவிநாயகர்.

சங்கீதக்கதிரை-10 வயதுக்குள்: இமையாணன், கரணவாய் வடக்கு இ. த. க பாடசாலை.

செம்பு கொண்டோடுதல்-19 வயதுக்குள் பெண்கள்: யாக்கரு விநாயகர், கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, வதிரி ரோ. க. பாடசாலை.

கரண்டி கொண்டோடுதல்-16 வயதுக்குள் பெண்கள்: வதிரி ரோ. க. பாடசாலை, கம்பர் மலை,

கயிறடித்தல்-13 வயதுக்குள் பெண்கள்: கம்பர் மலை, யாக்கரு விநாயகர், கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை.

நீளம் பாய்தல்-19 வயதுக்குள் ஆண்கள்: கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, யாக்கரு, இமையாணன்.

மூன்று காலோட்டம்-13 வயதுக்குள் ஆண்கள்: கம்பர்மலை, கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, இமையாணன்.

சாக்கோட்டம்: இமையாணன் கம்பர்மலை இமையாணன்

4×100 யார் அஞ்சல் ஓட்டம்-19 வயதுக்குள் பெண்கள்: இமையாணன், வதிரி ரோ. க. பாடசாலை, துன்னாலை வடக்கு இ. த. க. பாடசாலை.

மேற்பிரிவு உயரம் பாய்தல்: துன்னாலை வடக்கு இ. த. க. பாடசாலை, யாக்கரு விநாயகர், கரணவாய், பொன்னம்பல வித்தியாசலை.

கீழ்ப்பிரிவு அஞ்சல் ஓட்டம்: இமையாணன், யாக்கரு விநாயகர், கம்பர் மலை.

மத்திய பிரிவு அஞ்சல் ஓட்டம்: இமையாணன், கரணவாய் பொன்னம்பல வித்தியாசாலை, யாக்கரு விநாயகர்.

துவிச்சக்கரவண்டி மெதுவாக ஓட்டுதல்: வீ. மகேஸ்வரன் (யாக்கரு விநாயகர்)

ஆசிரியர்களுக்கான ஓட்டம்: இமையாணன் கி. த. க. பாடசாலை ஆசிரியர்.

வெளியார் ஓட்டம்: அ. அருமைத்துரை, கே. சிவலிங்கம்.

ஆண்பாடசாலைகளின் சாம்பியனாக இமையாணன் அ.த.க. பாடசாலை தெரிவு செய்யப்பட்டது.

பெண் பாடசாலைகளில் வதிரி ரோமன் கத்தோலிக்க பாடசாலை தெரிவு செய்யப்பட்டது.

மொத்தம் பங்கு பற்றிய 26 பாடசாலைகளுள் முதல் தரமான 7 பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டன.

பரிசில்களை உடுப்பிட்டி எம். பி. திரு.மு. சிவசிதம்பரம் வழங்கினர்.

மு. சிவசிதம்பரத்தை வரவேற்று நெல்லியடி மெதடிஸ்த மிஷன் பாடசாலை அதிபர் திரு. ஜே. கே. செல்லத்துரை பேசினர்.

## ரூ. 50,000 நஷ்டஈடு கொடுக்க வைஜயந்திக்கு உத்தரவு

சூரத், ஜூன் 21

பரோடாவிலும், ஆமதாபாத்திலும் "சண்டாளிகா" என்ற நாட்டிய நாடகத்தை கடந்த ஏப்ரல் 19, 20, 21-ம் திகதிகளில் நடத்தித் தருவதாக பரோடாவிலுள்ள கேரள சாகித்திய கலா நிகேதன் என்ற ஒரு டிரஸ்டின் தலைவரான திரு. எம். பி. அச்சன் என்பவருடன் சினிமா நடிகை வைஜயந்திமாலா ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டிருந்தார்.

திரு. அச்சன் இதற்காக விளம்பரங்கள் செய்திருந்ததுடன் இரு நாட்களிலும் டிக்கெட்டுகளையும் விற்றுவிட்டார். ஆனல் வைஜயந்திமாலா நாடகத்தை நடத்தாமலேயே பம்பாய்க்குத் திரும்பிப் போய் விட்டாராம். இதனல் டிக்கெட் பாரங்களை எல்லாம் வாபஸ் தரவேண்டியிருந்தது.

ஆகவே தனக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டதென்றும், இது ஈடு செய்யப்படவேண்டும் என்றும் வைஜயந்திமாலா அவரது பாட்டி யதுகிரிதேவி, தகப்ஞர் ராமன் ஆகிய மூவர் மீதும் அச்சன் வழக்கு தொடுத்தார்.

வழக்கு விசாரணைக்கு வந்த போது இதை ஆமதாபாத் மேயர் ஸ்ரீ ஜெயகிருஷ்ண ஹரி வல்லபதாஸின் மத்தியஸ்தத்திற்கு விட்டுவிடுவதென்று இரு சாராரும் ஒப்புக்கொண்டனர்.

ஒப்பந்தப்படி நாடகம் நடத்திக்கொள்வதற்காக அந்த மூவரும் ரூ. 50,000 நஷ்டஈடும், ரூ. 2000 செலவுத் தொகையும் கொடுக்கவேண்டும் என மத்தியஸ்தர் தீர்ப்பளித்திருக்கிறார்.

## வானெலி நிகழ்ச்சிகள்

### திங்கள் 22-6-64

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-45 காலைக்கதிர், 6-55 கத்தோலிக்கநற்சிந்தனை, 7-15 தேர்ந்த இசை, 7-45 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதம்.

பகல் 12-00 திரை இசை, 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப்பதிவுகள், 5-45 திரை இசை.

இரவு 6-10 விலைவாசிகள், 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வீணை — செல்வி யோகா சிவசுப்பிரமணியம், 7-15 பாட்டு — திருமதி நாகலக்ஷ்மி சத்தியவாகீஸ்வரன், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 எங்கள் விருப்பம், 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-45 வாத்திய இசை, 10-00 நேயர்விருப்பம்.

## வருமான வரியால் வற்றும் தரும நிதி

கொழும்பு, ஞாயிறு

பௌத்த மக குரவரான வண. அனகாரிக தர்மபாலாவின் பிறந்த தினத்தை செப்டம்பர் 17 பொது விடுமுறை தினமாக அரசாங்கம் பிரகடனம் செய்திருக்கும் இவ்வேளையில் பௌத்தமத ஆக்க வேலைகளுக்காக அவர் நிர்மாணித்த 'தர்மபாலா தர்ம நிதி'க்கு ஆபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாகி வருகிறது. 1930ம் ஆண்டில் நிறுவப்பட்ட இந்த நிதிசுமார் 5 லட்சம்ரூபாய்பெறுமானமானது என மதிப்பிடப் பட்டிருக்கிறது. வருமான வரியாக இதுவரை இந்த நிதியிலிருந்து 1 லட்சம் ரூபாய் வரையில் அரசாங்கத்தால் வசூலிக்கப்பட்டுவிட்டது. சுமார் இரண்டரை லட்சத்துக்கு மேற்பட்ட தொகையை வருமான வரிப் பழைய பாக்கி என்ற ஹோதாவில் இப்போது அரசாங்கம் கோரியுள்ளது. எனவேமேலும் வருமானவரியின் பேரால்இந்த நிதியிலிருந்து அரசாங்கத்தால் பணம் கோரப்பட்டால் இந்த நிதியே இல்லாது போகும்நிலை ஏற்படலாம் என மகாபோதி சங்கம் அச்சம் தெரிவித்துள்ளது.

எனது இல. இஅ. 1/71
(460-ம் அத்தியாயக்)

காணி கொள்ளும் சட்டம்
7-ம் பிரிவின்படியான அறிவித்தல்

கீழே விவரிக்கப்பட்டிருக்கும் காணியைப் பொதுத் தேவையொன்றிற்கென எடுத்துக்கொள்ள எண்ணியிருக்கப்படுகின்றது. மேலதிக விபரங்களுக்குத் தயவு செய்து 19-6-64-ந் திகதியின் 14,069-ம் இலக்க அரசாங்க வர்த்தமானியைப் பார்க்கவும்.

அட்டவணை

காணிப் பெயர்:- சோமிலன்ட் தோட்டம். ஹேனமுள்ளை-வத்தப்பொல தெரு வரிமதிப்பு இல. 1331 இன் பகுதி.

கிராமப் பெயர்:- மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தோட்டமுனை, கெஹெல்வத்தைப் பட்டணசபை எல்லைக்குள் வட்டார இல. 6-கொறக்கபொல, வத்தப்பொல.

துண்டு பட இல.:- பிரதம பட இல. ஏ. 5324 இல் துண்டு இல. 1.

ஆர். பாஸ்கரலிங்கம்,
களுத்துறை மாவட்ட உதவி அரசாங்க அதிபரும்.
காணிகொள்ளும் அதிகாரியும்.


அனைத்திலங்கைப் பண்டிதர் சங்கம்

பண்டித வித்துவான்மார்களே! எங்கள் சங்கம் கல்விமந்திரியை பேட்டிகாண இருப்பதால் உடனடியாகப் பின்வரும் விபரங்களைச் செயலாளருக்கு அனுப்பி வைக்கவும். பள்ளிக்கூட விலாசம், மேல்வகுப்புகளில் படிப்பிக்கும் நேர அளவு, சேவை விபரம், தேர்வு சித்தியெய்திய ஆண்டு. குக. வயிரவனர், மகளிர் கல்லூரி, பருத்தித்துறை. 608

EDUCATIONAL

Jaffna - classes in Sanskrit, Pali, Tamil, etc. for B. A. (Ceylon & London) and Advanced Level For particulars, apply c/o Elanadu. 531

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3 Shows. Sats & SunsFour
Walt Disney's
THE ABSENT - MINDED PROFESSOR

வரி விளம்பரம்

தேவை

தேசிய சவீப் விற்பதற்கு கிராமந்தோறும் ஆள் தேவை. 3 சத வீதம் கொமிஷன் கொடுக்கப்படும். ரூ 100/- கட்டுப்பணத்துடன் நேரில் சமுகமளிக்கவும். கொழும்புபிளான் ஜுவலறிகவுஸ், நல்லூர், யாழ்ப்பாணம். தொலைபேசி: 461 493

கபிரியேல் தயாரிப்புகள்

1. கபிரியேல் பெயின் ஓயில்

சகல நோவு, வீக்கம், வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஓயின் மென்ற்

சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண்களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்

தடிமன், தலையிடி, சந்துவலி போன்ற எல்லா வேதனைகளையும்தணிக்கவல்ல விசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்:
GABRIELS, Chunnakam. 273

தேவை

நல்லநிலைமையிலுள்ள ரான்சிஸ்டர் ரேடியோ (Transistor-Radio) தேவை. விபரங்களை எழுதவும். பொன்னையா இரத்தினம், கல்லூரி ஒழுங்கை, வட்டுக்கோட்டை. 532

தேவை

நல்ல முறையில் நடைபெற்றுக கொண்டிருக்கும் பற்றறி சேர்விஸுக்கு ஒரு கிளார்க் உடனே தேவை, 1000 ரூபா பிணைபணம் கட்டக்கூடியவராக இருத்தல் வேண்டும். நேரில் விண்ணப்பிக்கவும். மகேந்திரன் பற்றறி சேர்விஸ், 358, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 534

மகத்தான 5-வது வாரம்!

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜிதா (ஹட்டன்)
ஸ்ரீகிருஷ்ணு (திருமலை) வெம்பிளி (கண்டி) சீதா (பலறங்கொட) மொடேர்ன் (பதுளை)

எஸ். எஸ். ராஜேந்திரன் - விஜயகுமாரி
நடிக்கும்



நானும் ஒரு பெண்

ஜூன் மீ 26-ந் திகதி முதல்
கெப்பிட்டல் - பிளாஸா
மற்றும் சினிமாஸ் திரைகளில்

கொஞ்சும் குமரி

# நெற்காணிச் சட்டம் பூரண அமுலாகியது

கொழும்பு, ஞாயிறு

நாட்டில் உள்ள நெற்காணிகளில் 81 சத வீதமானவை நெற்காணிச் சட்டத்துக்கு உட்படுத்தப் பட்டுள்ளன. நெற்காணிச் சட்டத்தின் சகல வித சலுகைகளும், பலாபலன்களும் இந்த நெற்காணிகளுககு முழுஅளவில் கிடைத்துவருகின்றது.

1962—63-ம் நிதியாண்டில், அதற்கு முந்திய நிதியாண்டில் உற்பத்திசெய்யப்பட்ட நெல்லைவிட 10 லட்சம் புசல் நெல் மேலதிகமாக உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும். 4,91,53,507 புசல் நெல் அந்த வருடத்தில் உற்பத்திசெய்யப் பட்டுள்ளதாகவும் சென்ற வெள்ளிக்கிழமை வெளியாகிய விவசாய சேவை கமிஷனரின் நிர்வாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் உள்ள நெற்காணிகளில் இதுவரை நெற்காணிச் சட்டத்துக்கு உட்படுத்தப் படாத காணிகள் காணி அபிவிருத்தி சட்டத்திற்கமைய நெற்காணி சட்டத்துக்கு புறம்பானவையாதலால் அவை பயிர்ச்செய்கை நிலங்களாக கருதப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நெல் உற்பத்தி

குறிப்பிட்ட நிதியாண்டில், பெரும் போகச் செய்கை மூலம் 3,15,77,707 புசல் நெல்லும் சிறுபோக செய்கை மூலம் 1,75,75,800 புசல் நெல்லுமாக மொத்தம் 4,91,53,507புசல்உற்பத்தி செய்யப்பட்டது. சென்ற நிதியாண்டில் 4,80,69,000 உற்பத்தி செய்யப்பட்டது:

1963-ம் ஆண்டில் 1962-ம் வருடத்தைவிட சிறிது அதிகமன தொகையில்நெல்உற்பத்தி செய்யப்பட்ட போதிலும் அது எதிர்பார்த்ததைவிட குறைவானதேயென கமிஷனர் திரு. ஜே. வி. பொன்சேகா தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இருபோக காலங்களிலும் வெவ்வேறு பகுதிகளிலும் பெருமழை காரணமாகவே இவ்விதம் உற்பத்தி எதிர்பார்த்ததைவிடக் குறைந்தது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரசாயன பசளை உபயோகம்

குறிப்பிட்ட நிதியாண்டில் விவசாயிகள் இரசாயன பசளைகளை பெருமளவில் உபயோகித்துள்ளனர் எனவும் இந்த ஆண்டிலேயே வேறெந்த பயிருக்கும் (தேயிலை தவிர்த்து) உபயோகிக்கப்பட்ட பசளையைவிட பெருந்தொகையான பசளை (47,558தொன்) நெல் உற்பத்திக்கு உபயோகிக்கப்பட்டுள்ளதாகவும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

## கடனுதவி

கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாயிகளுக்கு கடனுதவி வழங்கப்பட்ட போதிலும பலர் அதைப் பயன்படுத்தாது விடுவது குறித்து ஒரு மதிப்பீடு செய்யப்பட்டதாகவும் அதிலிருந்து 35 சத விகிதத்தினர் கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தவர்களாக சேராமலிருப்பதாகவும் கூட்டுறவு சங்கங்கள் விவசாயிகளின் வசிப்பிடத்திலிருந்து மிகத் தூரத்தில் இருப்பதே இதற்கு முக்கிய காரணம் எனவும் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது குறிப்பிட்ட நிதியாண்டில் 1030 லட்சம் ரூபா விவசாயிகளுக்கு கடனுக வழங்கப்பட்டதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது.

## கூப்பன் அரிசி

குறிப்பிட்ட நிதியாண்டில் உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் 27,759,722 புசல் நெல்லை அரசாங்கம் விவசாயிகளிடமிருந்து வாங்குவதாகவும் இதில் 391,510 தொன் நெல் ஆலைகள் மூலம் குற்றப் பட்டு உணவுக் கமிஷனருக்கு வழங்கப்பட்டதாகவும் அறிக்கை தெரிவிக்கின்றது, கடந்த மூன்று வருடங்களில் கூப்பனுக்கு வழங்கப்படும் அரிசியில் உள்நாட்டில் விளைவிககப்பட்ட அரிசி 50 சதவிகிதமாக இருந்து வருகிறதெனவும் அறிக்கை தெரிவிக்கின்றது.

சிறு சிறு நீர்ப்பாசன திட்டங்களால் 70,600 ஏக்கர் நிலசாகுபடி செய்யப்பட்டதாகவும், பயிர் இன்சூரன்ஸ் 65,000 ஏக்கரிலிருந்து 200,000 ஆக அதிகரித்துள்ளதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது.




நிறுத்துங்கள்!

தரம் குறைந்த மைகளினால் உங்கள் பேனையை துஷ்பிரயோகம் செய்வதை நிறுத்துங்கள்- பார்க்கர் சுப்பர் குயிங்க் பாவியுங்கள். இதில் பேனையைப் பாதுகாக்கும் சொல்வ் × உண்டு. சுப்பர் குயிங்க் புதிய பேனைகளைப் புத்துணர்ச்சியுடனும், பழைய பேனைகளை புதிய பேனைகளைப் போல மீண்டும் எழுதவும் உதவி செய்கின்றது.

இது ஒரு
பாக்கர் பேனை
கம்பனியின் உற்பத்தி

உலகைப்பரில் அதிகமாக நாடும் பேனைகளைத் தயாரிக்கும் ஸ்தாபனத்தினர்.

# சுதந்திர சதுக்கத்தில் ஆரம்பவிழா

கொழும்பு, ஞாயிறு

பார்லிமெண்டின் புதிய கூட்டுத் தொடரின் ஆரம்ப விழா சுதந்திர சதுக்கத்தில் நடைபெறும். அடுத்த மாதம் 2-ந் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பவிழா ஆரம்பமாகும்.

சென்ற வாரம் கட்சித் தலைவர்கள் கூடி கூட்டத் தொடரின் ஆரம்பவிழாவை பார்லிமெண்ட் மண்டபத்தில் நடத்துவதென முடிவு செய்திருந்தனர். எனினும் ஆரம்ப விழாவில் பெருந்தொகையான பொதுமக்கள் கலந்துகொள்ள வகை செய்யக்கூடியதாகவும், சிம்மாசனப பிரசங்கத்தை மக்கள் நேரில் கேட்கக்கூடியதாகவும் இருக்கும் என்பதாலே சுதந்திர சதுக்கத்தில் நடத்துவதென அரசாங்கம் இறுதி முடிவு செய்துள்ளது.

# விஜயவாடா சம்பவம்

புதுடில்லி, ஜூன் 21

விஜயவாடாவில் ஏற்பட்ட தீ வைக்கும் சம்பவம் குறித்து அங்கு விஜயம்செய்துவிட்டு வந்த திரு. கே. எல். ராவ், உள்நாட்டுமந்திரி நந்தாவுடன் விவாதம் நடத்தினர்.

# "காஷ்மீர் பற்றி ரஷ்யாவின் கொள்கை மாறுது"

## நேரு ஒரு தவப்புதல்வர் என திரு. மிக்கோயன் புகழ் மாலை

புதுடில்லி, ஜூன் 21

காஷ்மீர் சம்பந்தமான ரஷ்யாவின் கொள்கை மாறவில்லையென இங்கு வந்துள்ள சோவியத் உதவிப் பிரதமர் மிக்கோயன் நிருபர்களிடம் அறிவித்தார்.

பிரதம மந்திரி திரு. லால் பகதூர் சாஸ்திரியைச் சந்தித்தபின், அவர் நிருபர்களிடம் பேசுகையில் தாங்கள் இருவரும் நட்பு முறையில் பேசியதாகத் தெரிவித்தார். இந்தப் பேச்சுகள் பற்றி நானோ, திரு. சாஸ்திரியோ அதிருப்தியடையக் காரணம் இல்லையென்றும் மிக்கோயன் கூறினர்.

ரஷ்யாவுக்கு விஜயஞ்செய்யுமாறு திரு. சாஸ்திரிக்குத் தாம் அழைப்பு விடுத்ததாயும் அவர் கூறினர்.

திரு. மிக்கோயன் இன்று காந்திஜியின் சமாதியான ராஜ்காட்டுக்கும், நேருஜியின் சமாதியான சாந்திகாட்டுக்கும் சென்றிருந்தார்.

"நேருவின் கொள்கையைத் தொடர்ந்து வலுவாகப் பின்பற்றும் விஷயத்தில் ரஷ்யா இந்தியாவுக்கு உதவிபுரியும். திரு. நேரு இந்தியாவின் தவப்புதல்வர். சிறப்பு மிக்க தலைவர். அவரது மறைவால் சோவியத் மக்களும், எங்கள் பிரதமர் குருஷ்சேவும் துக்கத்தில் ஆழ்ந்திருக்கின்றனர். நேரு பல துறைகளில் முக்கிய பணியாற்றினர். அவரது காலத்தில் ரஷ்யாவுக்கும், இந்தியாவுக்குமிடையே உறவு அபிவிருத்தி கண்டிருந்தது" என்றும் மிக்கோயன் கூறினர்.

# விக்னராஜா இடமாற்றம்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் உதவி போஸ்ட் மாஸ்டர் திரு. பி. ஜே. எச். ஏ. விக்னராஜா கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அடுத்த மாதம் முதற்திகதியிலிருந்து அவர் கொழும்பில் கடமையாற்றுவார்:

திரு. விக்னராஜா, பொதுச் சேவை தொழிலாளர் தொழிற் சங்க சம்மேளனத்தின் யாழ்ப்பாணகிளைநிர்வாகசபைஅங்கத்தவராகவும் உதவி போஸ்ட் மாஸ்டர் யூனியனின் மத்திய கமிட்டி அங்கத்வராகவும் இருந்தவர்.

# விஞ்ஞான சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஞாயிறு

பிரபல அணு இயக்கவியல் ஆராய்ச்சியாளரானவிஞ்ஞானி திரு. கே. கந்தையா யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் நேற்றுக் காலை விஞ்ஞான ஆராய்ச்சிக்கான உபகரணங்கள் என்னும் விஷயம் பற்றி விரிவுரை நிகழ்த்தினர்.

# தமிழரசு எம். பி. . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மனதான நியாயமான கோரிக்கைகளையும், எமது எதிர்ப்பு எமது கஷ்டங்கள் ஆகியவைகளை இந்த அரசாங்கம் வேண்டுமென்றே புறக்கணித்து விடுகிறது. இதேசமயம் வட-கிழக்கு மாகாணங்களுக்கு இரண்டாயிரம் சிங்கள ஆசிரியர்களை அனுப்பி எங்கள் குழந்தைகளின் தொண்டைக்குள் சிங்களத்தைத் திணிப்பதன் மூலமும், தோட்டப் பகுதிகளில் தமிழ் தோட்டத் தொழிலாளிகளின் குழந்தைகளுக்கு அவர்களுடைய உரிமையான தாய்மொழி கல்வியை மறுத்து சிங்கள மொழி மூலம் கல்வியளிப்பதன் மூலமும் கல்லூரி அதிபர்களும் பாடசாலைத் தலைமை ஆசிரியர்களும் சிங்களத்தில் தேர்ச்சிபெற வேண்டுமென்று நிர்ப்பந்திப்பதன் மூலமும், அரசாங்கத்தில் தமிழ் பேசும் மக்கள் உத்தியோகம் பார்க்கும் உரிமையை கர்ணகடூரமாக மறுக்கும் கட்டாய ஓய்வு உத்தரவு மூலமும் தமிழ் பேசும் மக்களை அடிமைப்படுத்துவதற்கு அரசாங்கம் உறுதி பூண்டிருக்கிறது. அரசாங்கத்தின் இககொடுங்கோன்மைச் செயல்களால் இந்நாட்டிலுள்ள தமிழ், சிங்கள மக்கள் உ னிருந்து வாழ்வதற்கு இடமில்லை யென்று கருத வேண்டியுள்ளது இந்நிலையில் தமிழ்பேசும் மககளின் சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கு தமிழ் பேசும் மக்களிடம் புதிய கட்டளை பெறும் பொருட்டு தமிழ் அரசுக்கட்சியின் பார்லிமெண்ட் அங்கத்தவர்கள் தங்கள் பார்லிமெண்ட் ஸ்தானங்களை ராஜினாமாச் செய்ய வேண்டும். தமிழ்பேசும் மக்களும் தங்கள் சுயநிர்ணய உரிமையைப் பெறுவதற்கு தியாகம் செய்யத் தயாராக வேண்டும்" என்று செயற்குழுவின் தீர்மானம் கூறுகிறது.

# ஐக்கியவங்கி அடைவு பிடிக்கும்

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாண ஐக்கிய மாகாண வங்கியிலும் அதன் கிளைகளிலும் இன்று தொடக்கம் நகை அடைவு பிடிக்கப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. 8 சத வீத வட்டியுடன் அடைவு பிடிக்கப்படுமென்றும், அத் தொகையை வசதிக்கேற்ப தவணை முறையில் திருப்பி கட்டலாம் எனவும் சங்கானை, சாவகச்சேரி, கன்ஞகம், பரந்தன், பருத்தித்துறை ஆகிய கிளைகளில் மேலதிக விபரத்தை பெறலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# "வளர்ந்த பிள்ளைகளுடன் தந்திரமாக நடக்க வேண்டும்"

## பெற்றேருக்கு மரண விசாரணை அதிகாரி புத்திமதி

யாழ்ப்பாணம், திங்கள்

ஆவரங்காலிலுள்ள பீடித் தொழிற்சாலையில் கடமையாற்றிய சிவபாக்கியநாதன் என்ற 19 வயது வாலிபன் அத் தொழிற்சாலையிலேயே கடமையாற்றிய அவருடைய உறவினரான 14 வயதான கிருஷ்ணமணி என்ற பெண்ணை விவாகஞ்செய்ய தமது தந்தை தடையாகவிருந்ததினலும் கிருஷ்ணமணியின் பெற்றோர் தமது மகளை வேலையிலிருந்து நிறுத்தி ஆவரங்காலிலிருந்து கரணவாய்க்கு இருப்பிடத்தை மாற்றியதாலும் மனமுடைந்து கிருமிநாசினி அருந்தி தற்கொலைசெய்துகொண்டார்.

ஆவரங்காலைச் சேர்ந்த சிவஞானத்தின் மகன் சிவபாக்கியநாதனின் மரணங்குறித்து மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் விசாரணைசெய்தார்.

காலஞ்சென்றவரின் சகோதரி பாலசரஸ்வதி சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:

"காலஞ்சென்றவர் எனது சகோதரன். பீடித் தொழிற்சாலையொன்றின் ஆவரங்கால் கிளையில் கடமையாற்றினர். அதே தொழிற்சாலையில் கடமையாற்றிய கிருஷ்ணமணி என்ற 14 வயதுப் பெண்ணைக் காதலிப்பதாகவும் தாம் அவரை விவாகஞ்செய்ய உத்தரவு கொடுக்கும்படியும் எமது தந்தையைக் காலஞ்சென்றவர் கேட்டிருந்தார். கலியாணத்துக்குரிய வயது வரவில்லை என்று கூறி உத்தரவு மறுக்கப்பட்டது. அத்துடன் கிருஷ்ணமணியின் பெற்றோர் தமது மகள் வேலைக்குப் போவதை நிறுத்தி ஆவரங்காலிலிருந்து கரணவாய்க்கு அவருடைய இருப்பிடத்தையும் மாற்றினர்கள். அதனால் மனமுடைந்த எனது சகோதரர் சம்பவம் நடைபெற்ற தினம் வேலைக்குப் போகவில்லை. அன்று பிற்பகல் 4 மணியளவில் ஒருசோடா போத்தலுடன் வீட்டிற்கு வந்தவர். வீட்டு முற்றத்திற்கு வந்ததும் எனது முன்னிலையில் சோடாப் போத்தலில் இருந்ததைக் குடித்தார். குடித்ததும் துப்பினர். பின் நச்சுத் திராவகம் குடித்து விட்டதாகச் சொன்னர். அதன் பின் சத்தியெடுத்தார். நான் கூழறவே வாசிகசாலையிலிருந்து சில வாலிபர்கள் வந்து எனது சகோதரனை ஆஸ்பத்திரிக்கு கொண்டு சென்றனர்."

சிவபாக்கியநாதன் தற்கொலை செய்து கொண்டதாகத் தீர்ப்பளித்த திரு. கனகரத்தினம் பெற்றோர் வளர்ந்த பிள்ளைகளுடன் மிகத் தந்திரமாக நடந்துகொள்ள வேண்டுமென்றும் இவ்விபத்துப் பெற்றோரின் முன்பின் ஆராயாத ஆத்திரமூட்டக்கூடிய பேச்சினல்தான் நடைபெற்றது என்றும் குறிப்பிட்டார்.

# சமசமாஜ வாலிபர் சங்கப் பிரதிநிதிகள்

## டாக்டர் கொல்வின் சந்தித்தார்

யாழ்ப்பாணம், திங்கள்

லங்காசமசமாஜக் கட்சியின் பொதுக் காரியதரிசி டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா நேற்று யாழ்ப்பாணத்தில் யாழ்ப்பாணப் பகுதி சமசமாஜ வாலிப சங்கங்களின் பிரதிநிதிகளைக்கொண்ட மகாநாடு ஒன்றில் கலந்துகொண்டு பேசினர்.

இரகசியமாக நடைபெற்ற இந்த மகாநாட்டில் வாலிப சங்கங்களைச் சேர்ந்த 80 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி—லங்கா சமசமாஜக்கட்சி கூட்டு அரசாங்கம் அமைக்கப்பட்ட பின்னர் சமசமாஜவாலிப சங்கம் எதுவும் பிரிந்துபோகவில்லையென்றும் சில சங்கங்களைச் சேர்ந்த ஒருசிலர்மட்டுமே வெளியேறியுள்ளனர்என்பதும் இம் மகாநாட்டிலிருந்து தெரிய வந்துள்ளதாக மகாநாட்டு முடிவில் விடுக்கப்பட்ட அறிக்கை கூறுகிறது.

# பண்டிதர் கழகத்தின் இலக்கண அறிவுத்தேர்வு

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் ஆசிரியசங்க அலுவலகத்தில் பண்டிதர் சி. கா. தம்பையாவின் தலைமையில் கூடிய ஈழத்துப் பண்டிதர் கழகம் ஆறும் வகுப்புத் தொடக்கமுள்ள எல்லா வகுப்புகளுக்கும் பாடத்திட்டம் வகுத்து தேர்வு நடத்தி 50 புள்ளிகளுக்கு மேல் எடுப்பவர்களுக்கு பத்திரமும் 75 புள்ளிகளுக்கு மேல் எடுப்பவர்களுக்கு பதக்கப் பரிசு வழங்குவதென்றும், படித்த எவரும் பங்குபற்றத்தக்கதாக நன்னூல் விசித்தியுரையில் இலக்கண அறிவுத் தேர்வு நடத்தி அதற்கும் மேற்குறித்தபடி பத்திரமும் பதக்கமும் வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனதாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 65-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டுஜூன் மாதம் 22-ந் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.